# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 சித்திரை 01 வியாழக்கிழமை (13-04-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:119


## திருமலையில் கலைநிகழ்ச்சியில் குண்டுவெடிப்பு!

திருகோணமலை நகரின் மக்ஹெஸர் ஸ்ரேடியத்தில் நேற்று மாலை நடைபெற்ற கலைநிகழ்சியின்போது இரவு 9.40 மணியளவில் திடீரென இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 12 வயதுச் சிறுவன் உட்பட 4 பேர் கொல்லப்பட்டனர்; 65க்கும் அதிகமானோர் காயமடைந்தனர். 15 பேரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது.

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் தனியார் ஒலிபரப்பு நிறுவனம் ஒன்றின் ஆதரவில் நேற்று அங்கு கலை நிகழ்ச்சி ஒன்றுக்கு ஏற்பாடாகியிருந்தது.

மாலையில் ஆரம்பமான இந்த நிகழ்ச்சியில் பார்வையாளர்களாகச் சுமார் ஐயாயிரம் பேர் பங்குபற்றினர்.

ஸ்ரேடியத்தின் நடுவே பொருத்தப்பட்டிருந்த ஒலிபெருக்கிச் சாதனம் அருகே இந்தக் குண்டு வெடித்துள்ளது.

குண்டு வெடித்ததும் மக்கள் அல்லோலகல்லோலப்பட்டுச் சிதறி நாலாபுறமும் ஓடினர். நெரிசலில் சிக்கிப் பலர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் உடனுக்குடன் திருமலை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

குண்டு வெடிப்பால் ஸ்ரேடியத்தின் கண்ணாடிகளும் நொறுங்கின.

(8ஆம் பக்கம் பார்க்க)

### புத்தாண்டு விடுமுறை

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு இன்று உதயன் நிறுவனப் பணியாளர்களுக்கு விடுமுறை தினமாகும். அதனால் நாளை வெள்ளிக்கிழமை மட்டும் உதயன் உங்களுக்குக் கிடைக்கமாட்டான். சனிக்கிழமை (15-04-2000) சஞ்சீவி வழமைபோல் வெளிவரும்.

# ஹர்த்தாலால் நேற்று குடாநாடு ஸ்தம்பிதம்!

யாழ்ப்பாணம்,ஏப்ரல் 13

**போர் தீவிரமடைந்துள்ள பளை உள்ளிட்ட பச்சிலைப்பள்ளி பிரதேசத்திலிருந்து வெளியேற முடியாத நிலையில் சிக்குண்டுள்ள பொது மக்களை அங்கிருந்து வெளியேற அனுமதிக்க வேண்டும் என்று கோரி நேற்று அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தால் காரணமாக யாழ்.குடாநாடு ஸ்தம்பித்தது.**

**யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் மனிதநேய அமைப்புக்களும் ஒன்றிணைந்து விடுத்த வேண்டுகோளை ஏற்று இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.**

ஹர்த்தால் காரணமாக தேநீர்க் கடைகள் முதல் சகல வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன; போக்குவரத்துச் சேவைகள் எவையும் இடம்பெறவில்லை; அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் யாவும் மூடப்பட்டுக்கிடந்தன.

வைத்தியசாலை, யாழ்.பஸ் நிலையம், நகரப் பகுதி, பிரதான வீதிகள் போன்றவை மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்

(8ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று உண்ணாவிரதமும் சர்வமதப் பிரார்த்தனையும்!

யாழ்ப்பாணம்,ஏப்ரல்13

பச்சிலைப்பள்ளி மக்களின் அவலநிலையைச் சர்வதேசச் சமூகத்துக்கு எடுத்துக்காட்டும் வகையில் யாழ். செயலக் வளாகத்தில் நேற்று உண்ணாவிரதப் போராட்டமும் சர்வமதப் பிரார்த்தனையும் இடம்பெற்றன.

இதில் பல்கலைக்கழக மாணவர்கள், இந்து, கிறிஸ்தவ மதகுருமார்கள் மற்றும் மனித நேய அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் உட்பட ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

காலை 10 மணியளவில் இந்துக் குருமார் ஒன்றியத்தின் பொருளாளர் பிரம்மஸ்ரீ பாலசுப்பிரமணியக்குருக்கள் மற்றும் வண. பிதா ஜெயசீலன் ஆகியோரின் மதப்பிரார்த்தனைகளுடன் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பமாகியது. தொடர்ந்து சர்வமதப் பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.

போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் செயலகத்

(8ஆம் பக்கம் பார்க்க)



**அனைவருக்கும் உதயனின் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள் உரியனவாகுக.**

## பல்கலைக்கழக மாணவர் நன்றி தெரிவித்து அறிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.13

நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்க உதவிய அனைத்துத்தரப்பினருக்கும் நன்றி தெரிவித்து யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். பிரதேசத்தில் சிக்கியுள்ள அப்பாவிப் பொதுமக்களைப் படையினர் மனிதக் கேடயங்களாக பயன்படுத்துவதை எதிர்த்து, எமது மக்க

(8ஆம் பக்கம் பார்க்க)

## மந்திகையில் ஈ.பி.டி.பியின் அலுவலகம் மீது சூடு!

நெல்லியடி,ஏப்ரல்13

மந்திகையிலுள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தின் மீது நேற்று முன்தினம் இரவு 11-30 மணியளவில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

அலுவலகத்தின் பின் பகுதியை நோக்கி இனந்தெரியாதோரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொள்ளப்பட்டது என்றும் -

ஆனால் எதுவித சேதமும் ஏற்படவில்லை என்றும் - அந்த அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த அலுவலகம் மீது அண்மைக் காலத்தில் இரு தடவைகள் கிரனேட் வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் கூறப்பட்டது.

(உ-க-3-109)

## சந்திரிகா வெளிநாட்டுக்கு

கொழும்பு,ஏப்.13

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐரோப்பிய நாடு ஒன்றுக்கு நேற்றுப் பயணமானார். தமது கண்ணில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கு மேலதிகசிகிச்சை பெறுவதற்காகவே பயணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

## முகமாலையில் 11 படையினர் பலி!

முகமாலைக்கும், பளைக்கும் இடையில் கண்டி வீதியை மீட்கப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சண்டையில் 11படையினர் உயிரிழந்தனர்; 22 படையினர் காயமடைந்தனர்; 31 படையினர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர் என்று அரச தரப்பு அறிவிப்புத் தெரிவித்தது.

(உ-3-6)

## பிரதமர் ஆஸ்பத்திரியில்!

கொழும்பு,ஏப்.13

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க நேற்று இரவு சுகவீனம் காரணமாக ஸ்ரீஜெயவர்த்தனபுர மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

(உ-3-6)

## கடற்படை ரோந்துப் படகு புத்தளம் பகுதியில் தகர்ப்பு

கொழும்பு,ஏப்.13

புத்தளம் கடற்பரப்பில் முகத்துவாரம் முனைக்கு அப்பால் நேற்றுக் காலை 6-30 மணியளவில் கடற்படையின் படகு ஒன்று தகர்க்கப்பட்டது. இதிலிருந்த கடற்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்; மூன்று கடற்படையினர் காயமடைந்தனர்.

கடற்கரும்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலில் கடற்படையினரின் வோட்டர் ஜெற் படகு மூழ்கடிக்கப்பட்டது என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றிக் கொழும்பில் கூறப்படுவதாவது:-

இலங்கைக் கடற்படையின் கரையோர ரோந்துப்படகு குதிரைமலை முனையில் ரோந்துப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது.

அச்சமயம் தென்திசையில் மீன்பிடிப் படகு ஒன்றை அவதானித்த கடற்படையினர் அதை அணுகினர். அந்தப் படகில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

கடற்படையினரும் பதில் தாக்குதலை நடத்தினர்.

அவ்வேளை பாரிய சத்தத்துடன் கடற்படையினரின் படகு வெடித்துச் சிதறி மூழ்கியது.

மீன்பிடிப் படகும் மூழ்கியது. அந்தப் படகு வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட விடுதலைப் புலிகளின் படகு என நம்பப்படுகின்றது - இப்படி மேலும் கூறப்பட்டது.

(உ-3-6)

## 300 பேர் வந்தனர்

யாழ்ப்பாணம்,ஏப்.13

பளையை அண்டிய தர்மக்கேணியில் சிக்குண்டிருந்த பொது மக்களில் 300 பேர் கிளாலி ஊடாக மிருசுவிலை நேற்றுக் காலை வந்தடைந்தனர்.

தர்மக்கேணியில் இருந்து நேற்று முன்தினம் இடம்பெயர்ந்து புலோப்பளைக்கு வந்து அங்கு தங்கியிருந்த இந்த மக்களை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் வாகனங்களில் அழைத்துவந்து மிருசுவில் தேவாலயத்தில் சேர்ப்பித்தனர்.

பின்னர் அவர்கள் குடாநாட்டின் பிறபகுதிகளுக்குச் சென்றனர்.

(உ-3-5)



ஹர்த்தாலின் காரணமாக வெறிச்சோடிக்கிடக்கும் யாழ்.நகரம். படங்கள்:- பொ.இராஜேஸ்வரன்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## வடமராட்சி கிழக்கில் இருந்து

# இடம்பெயர்ந்த மக்களின் குடும்ப விவரங்கள் பதிவு

நெல்லியடி, ஏப்ரல் 13

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்துள்ள குடும்பங்கள் தற்காலிகமாக அவர்கள் தங்கியிருக்கும் கிராமசேவை அலுவலர் பிரிவில் தமது குடும்ப விவரங்களைப் பதிவு செய்துகொள்ள முடியும் என்றும் —

அடுத்த மாதத்திலிருந்து அவ்வப்பகுதிக் கிராமசேவை அலுவலர்களிடமிருந்து நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் — கேட்கப்பட்டுள்ளது.

உலர் உணவு அட்டை தொலைந்தவர்கள் இடம்பெயரமுன் இருந்த பகுதியிலுள்ள கிராமசேவை அலுவலர்களிடமிருந்து அதனைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பாக அவ்வப்பகுதிக் கிராம சேவை அலுவலர்களைத் தும்பளையில் இயங்கும் அவசரகால உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இடம்பெயர்ந்த மக்கள் சந்திக்கலாம் என்று மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி. பி. வேலாயுதம்பிள்ளை தெரிவித்துள்ளார். (க-109)

## இடம் பெயர்ந்தோரின் ஓய்வூதிய வவுச்சர்கள்

தென்மராட்சி, ஏப்ரல் 13

பளைப் பிரதேச மக்கள் இடம் பெயர்ந்துள்ளதையடுத்து இப் பகுதி ஓய்வூதியர்களின் வவுச்சர்களும் எழுதுமட்டுவாழ், சொரிவி போன்ற இடங்களில் உள்ள ஓய்வூதியர்களின் வவுச்சர்களும் சாவகச்சேரி தபால் நிலையத்தில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க-117)


**ராஜா**
**யாழ்ப்பாணம்**

ரசிகர்களே!
இனித்திடும்
இன்பப் புத்தாண்டு
வாழ்த்துக்களைத்
தெரிவிப்பதில்
மகிழ்ச்சியடைகின்றது
உங்கள் உள்ளம்
கவர்ந்த
**ராஜா டாக்கீஸ்!**
இன்று முதல் குதூகல
ஆரம்பம்
அஜித், ஷாலினி
நடித்த
**அமர்க்களம்**
காட்சிகள்: 10.30, 2. 00
(சி/11604)



**கீன்**
**கல்வி நிலையம்**
திருநெல்வேலி
**கணக்கீடு - 2002**
புதிய மாணவர்களுக்கு
புதுவருட
வாழ்த்துக்களுடன்
ஆரம்பம்: 14-4-2000
நேரம்: 5.00மணி (ப-நே)
திங்., வெள், 5 – 6
By: S. நித்தி
(75378)



உ
வண்ணார்பண்ணை கலட்டி
**ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலய**
**இரதோற்சவம்**

இன்று (13-04-2000) வியாழக்கிழமை
விக்கிரம வருடப்பிறப்பன்று

காலை 8. 00 மணிக்கு வசந்த மண்டபப் பூசை ஆரம்பமாகி 9. 00 மணியளவில் விநாயகப் பெருமான் சித்திரத் தேரில் ஆரோகணிப்பார். அடியார்கள் வந்து தரிசித்து அருள் பெறுக.

விளம்பர அன்பளிப்பு:-
**தனுஜா ஜுவலர்ஸ்**
190/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(75377)



**Sale! Sale!! Sale!!!**
அதிசயம்! ஆனால் உண்மை!

ஒரு லெந் சூட்டிங் விலை 150 ரூபா மட்டுமே!
மேலும் புடைவைத்தினுசுகள் அனைத்துக்கும்
விசேட சலுகை உண்டு
கையிருப்புக் குறைந்தளவே!

**CITY TEX & TAILORS**
75, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(சி/11706)


## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

2000-4-10 அன்று நடைபெற இருந்த அரச அதிபருடனான சந்திப்பு அரச அதிபரினால் ஒருவார காலத்திற்குப் பிற்போடப்பட்டுள்ளதால் 2000-4-2 அன்று நடைபெற்ற எமது பொதுச் சபைக் கூட்டத்தில் ஏகமனதாக எடுக்கப்பட்ட தீர்மானத்தினை இடை நிறுத்தி வைப்பதெனவும், அரச அதிபரைச் சந்தித்து அவரின் முடிவு அறிவிக்கப்படும் வரை எமது அங்கத்தவர்களைத் தொடர்ந்தும் பழைய நடைமுறையிலேயே பாணை உற்பத்தி செய்து விநியோகிக்குமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

– நிர்வாகம்.

## திங்கள் முதல் வியாழன் வரை

# யாழ். வலயக் கல்விப் பணிமனை முன் மறியல் போர் நடத்துவதற்கு முடிவு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13

ஆரம்பக்கல்வி பாடநெறி ஆசிரியர் நியமனத்துக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்கள், ஏனைய பாடநெறிகளுக்கான ஆசிரிய நியமனங்களுக்காக யாழ். கல்வி வலய அலுவலகத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ள எதிர்வரும் திங்கள் முதல் வியாழன் வரை அங்கு மறியற் போராட்டம் மேற்கொள்ள முடிவு செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்கள் நேற்று யாழ். நகரில் கூடி இது தொடர்பான முடிவை எடுத்துள்ளனர்.

கடந்த 3ஆம் திகதி யாழ் கல்வி வலயம் முன்பாக இவர்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியிருந்தனர்.

தமது கோரிக்கை தொடர்பாக மாகாணக் கல்வியமைச்சுச் செயலர், ஈ. பி. டி. பி. நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கு மகஜர்கள் அனுப்பியதாகவும்—

இதுவரை ஆக்கபூர்வமான பதில் எதுவும் கிடைக்காததால் மீண்டும் மறியற் போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்திருப்பதாகவும்- பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். (உ-3-13)

## கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13

'யுனெஸ்கோ' அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த டிசெம்பர் மற்றும் ஜனவரி மாதங்களின் செயற்பாடுகளுக்கான கொடுப்பனவுகளை நாளை வெள்ளிக்கிழமை முதல் அந்தந்த வலயங்களில் உள்ள 'யுனெஸ்கோ' பணி இணைப்பாளர்களிடம் பெற்றுக் கொள்ளுமாறு மாவட்ட 'யுனெஸ்கோ' இணைப்பாளர் நா. க. சண்முகநாதபிள்ளை அறிவித்துள்ளார். (க)

## மாணவர்களின் அடையாள அட்டைகள்

புன்னாலைக்கட்டுவன் ஏப். 13

பளை மத்திய கல்லூரி மாணவர்களுக்குரிய ஒரு தொகுதி தேசிய அடையாள அட்டைகள் மாணவர்களுக்கு வழங்குவதற்காக கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் இயங்கும் பளை — கொடிகாமம் கோட்டக்கல்வி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் அலுவலக நேரத்தில் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-133)

## பளைக்கோட்ட ஜி. சீ. ஈ. பெறுபேறுகள்

பளை கோட்டப் பாடசாலைகளின் ஜி. சீ. ஈ சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளை கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள பளை–கொடிகாமம் கோட்டக்கல்வி அலுவலகத்தில் மாணவர்களும் பெற்றோர்களும் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம் என கோட்டக்கல்வி அலுவலர் அ. கயிலாயபிள்ளை தெரிவித்துள்ளார். (ஐ-133)


**நாகம்ஸ்**
சுன்னாகம்
ரஜனி, சௌந்தர்யா,
ரம்பா, செந்தில்
நடிப்பில்
**அருணாச்சலம்**
காட்சிகள் 11.00 2. 30
(புதிய நேரம்)
(11760)



**லிபேட்டி**
அச்சுவேலி
பிரபு, கனகா,
கவுண்டர்
நடித்த
**ஜல்லிக்கட்டுக்காளை**
காட்சிகள்; 10. 30. 2.30
T. P. 070- 212223
070- 212678
Fax No.
0094 - 70212223
(75258)



**பஸியொலி கல்வி நிலையம்**
காரைநகர்
A/L 2002
கலை வர்த்தக வகுப்புக்கள்

| | | |
|---|---|---|
| கணக்கீடு | — | திரு. V. உருத்திரசிங்கம் |
| வணிகக்கல்வி | — | திரு. K. சத்தி |
| பொருளியல் | — | திரு. E. ஞானேஸ்வரன் |
| தமிழ் | — | திரு. A. ஆத்திகன் |
| இந்துநாகரிகம் | — | திரு. S. கெங்காதரன் |

ஆரம்பம்:- 15- 04- 2000 சனி 11. 30 A. M.
(75382)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி
பா. சத்தியபாமா
அவர்களின் அன்புத் தந்தையார்

### பொன்னுத்துரை பாலசுந்தரம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தி அடையப்பிரார்த்திக்கின்றோம்.

3 ஆம் வருட மாணவர்கள்,
முகாமைத்துவ வணிகபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.
(75381)

## மரண அறிவித்தல்கள்

### இராசையா நிர்மலதுரை [ரகு]

கோயில் வீதி, நல்லூரை வசிப்பிடமாகக் கொண்ட இராசையா நிர்மலதுரை இந்தியாவில் அகால மரணமானார்.

அன்னார் இராசையா புஸ்பவதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி — அன்னமுத்து, அம்பலவாணர்—முத்துப்பிள்ளை ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
செ. சூரியன் (அண்ணன்)
(யாழ் தபாலகம்)

07/01, புகையிரத வீதி,
கந்தர்மடம்.
(75379)

### திருமதி துரைராசா செல்லம்மா

இணுவில் தெற்கு துரைவீதியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி துரைராசா செல்லம்மா நேற்று (12-04-2000) (புதன்கிழமை) சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராசாவின் அன்பு மனைவியும் சுப்பிரமணியசிவம், சிவபாதம், ஜெயராணி (கனடா) அவர்களின் அன்புத் தாயாரும், அருந்தவமலர், ஜெயபாலசுந்தரி, கருணாகரன் (கனடா) ஆகியோரின் மாமியாரும், ராஜ்குமார்(லண்டன்) சுரேஸ்குமார் (லண்டன்), சுபாஜினி (கொழும்பு) காந்தரூபன் (கொழும்பு), சிவதர்சினி, (இணுவில்), ஜெபிரேமினி, (இணுவில்), சிவரூபன் (இணுவில்), ஜீத்தேந்திரா (கனடா), துஷாறி (கனடா) மற்றும் ஜெயகுமாரி (லண்டன்), வைஷ்ணவி (லண்டன்), மோகனதாஸ் (கொழும்பு) ஆகியோரின் பேர்த்தியும் விதுஷா (லண்டன்), பிரணேஷ்வர் (லண்டன்) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி சிவபாதம்
(மருமகள்)

துரை வீதி,
இணுவில் தெற்கு.
(75383)

## புனித வியாகுல அன்னை திருவிழா

இளவாலை

13 - 04 - 2000 வியாழன் மாலை 5-30 மணிக்கு திருப்பலியும் திருச் சொரூபப் பவனியும்,

14 - 04 - 2000 வெள்ளி காலை 7-00 மணிக்கு திருவிழாத்திருப்பலியும்,

மாலை 5 - 30 மணிக்கு திருச்சிலுவைப் பாதையும் இடம்பெறும்.

பங்குத்தந்தையும், ஆலய மக்களும் இளவாலை.

(75348)


அனைவருக்கும்

எமது புத்தாயிரமாம் ஆண்டு

## வாழ்த்துக்கள்

வாங்கி விட்டீர்களா!

### விக்கிரம (2000 - 2001) வருஷ திருக்கணித பஞ்சாங்கம்

இம்முறை புத்தாயிரமாமாண்டை முன்னிட்டு இளையோரிடம் பஞ்சாங்க அறிவை வளர்க்கவும், பாடசாலை பாட விதானத்தில் சேர்க்கப்பட்ட பஞ்சாங்கம் பார்த்தல் விடயத்திற்கு உதவவும் அமைந்த கைந்நூல் ஒன்று இலவசமாக கிடைக்கிறது.

விலை ரூபா 80 00 மட்டுமே

திருக்கணித பஞ்சாங்க நிலையம்

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

(சி/11821)


## பிற்போடப்பட்டுள்ளது

ஏழாலை வடக்கு, கிழக்கு சனசமூக நிலைய அபிவிருத்தி நிதிக்காக வருடப்பிறப்பன்று மேற்கொள்ளப்பட இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்புக் குலுக்கல் நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 25-5-2000 திகதியன்று நடத்தப்படும் என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

நிர்வாகத்தினர்,

ஏழாலை வடக்கு, கிழக்கு சனசமூக நிலையம், ஏழாலை.

[75367]

## உயிரிழந்த மேலும் சிலரின் விவரம்

வவுனியா, ஏப்ரல் 13

தொடரும் ஓயாத அலைகள் — 3 நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் உயிரிழந்த மேலும் 4 பேரின் பெயர் விபரங்களை 'புலிகளின்குரல்' வானொலி அறிவித்துள்ளது.

அதன் விவரம் வருமாறு—

★ பூவிழி (நாகலிங்கம் பிறேமலதா — யாழ்ப்பாணம்),

★ 2 ஆம் லெப்டினன் கலாமதி(இமானுவேல் இமெல்டா — மன்னார்)

★ லெப்டினன் பாவரசி (சுப்பிரமணியம் கௌரி — யாழ்ப்பாணம்)

மைதிலி (பாலசுப்பிரமணியம் வசந்தகுமாரி — யாழ்ப்பாணம்) (இ—க)

## முக்கிய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13

யாழ் பல்கலைக்கழகத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெற உள்ள கலந்துரையாடலில் இராமநாதன் நுண்கலைத்துறை அனைத்து பிரிவு மாணவர்களும் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் கோரப்பட்டுள்ளது.

(இ—15)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழகத்தினால் புத்தாண்டுத் தினமான இன்று நடத்தப்படவிருந்த மாட்டு வண்டிச் சவாரிப்போட்டி பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

(க)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13

யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி மாணவர்களால் இன்றும் எதிர்வரும் 16 ஆம் 23 ஆம் திகதிகளிலும் நடத்தப்பட இருந்த 'இன்னிசை வார்ப்புக்கள்' நிகழ்வு தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது.

(க)


வாடிக்கையாளர்களுக்கு எமது உளங்கனிந்த

## இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

றேடியோ
றேடியோ கசற்
T. V டெக் வகைகள்
றேடியோ T V உதிரிப்பாகங்கள்
ஸ்ரபிலைசர் (Stabilizer)
அம்ளிபயர் (Computer Spares)
Deshets
UPS

என்பனவற்றை நியாயமான விலையில் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

றேடியோ, T. V, Fax machine கள் என்பனவும் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும்.

### V. K. இராசரத்தினம்

இல. 95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(75352)



## SURYA CHINIES

176, KASTHURIYAR ROAD, JAFFNA.

மிலேனியம் 2000 ஆம் ஆண்டு தமிழ்ப்புத்தாண்டை முன்னிட்டு

அன்பார்ந்த எமது வாடிக்கையாளர்களுக்கு

### சூரியா சைனீஸின் புத்தாண்டு வாழ்த்துக்களை

மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தரமான, சுவையான உணவுவகைகளை ஒடர் செய்து பெற்றுக்கொள்ள இன்றே நாடவேண்டிய இடம்:

### சூரியா சைனீஸ்

176, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சாந்தி உணவகம் நிர்வாகம். (75282)


## 31 ஆம்நாள் நினைவலைகள்

''உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்''



மண்ணகம் 16-10-1946

விண்ணகம் 14-03-2000

அமரர்

### தம்பிமுத்து - மாசிலாமணி (வவா)

(முன்னாள் அரச கட்டடத்திணைக்கள உத்தியோகத்தர்)

பிரபல கட்டடக் கலைஞரும்,
சமூகசேவையாளரும்
புகழ்பெற்ற விளையாட்டு வீரனுமாகிய
எம் தந்தையே!
எங்களுயிரைக் காத்து நின்றாய்
எங்களின் காவலனே
காலமெல்லாம் எங்களருகில்
வாழுவென வந்தவனே
பக்குவமாய் உனைக்காத்து
எக்கணமும் நாமிருப்போம்
என எண்ணியே இறுமாந்திருந்த வேளை
ஏதுமறியா காலன் அவன் கடுகியே
பறித்திட்டானே - ஆனாலும்
மண் விட்டு மறையுமட்டும்
உனைமட்டும் நாம் மறவோம்.

மல்வம் திருக்குடும்பஆலயத்தில் இன்று (13-4-2000) வியாழக்கிழமை 7 மணிக்கு (புதியநேரம்) நடைபெறுகின்ற இரங்கல் திருப்பலியிலும் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பு மனைவி,
அருமைப் பிள்ளைகள், தாய்,
சிறிய தாய், சகோதரர்கள்,
பேரமக்கள், மருமக்கள், மாமியார்,
மைத்துனர்கள், மைத்துனிகள்,

'தமிழகம்',
மல்வத்தை, உடுவில். (75366)


## நாளை ஆரம்பமாகிறது

யாழ். திருமறைக் கலாமன்றம் வழங்கும்

தவக்கால ஆற்றுகை

# பலிக்களம்

(திருப்பாடுகளின் காட்சி)

தொடர்ந்து மூன்று நாள்கள்

14, 15, 16 ஏப்ரல் 2000

நேரம்— மாலை 6-15 மணி

இடம்— மன்ற அரங்கு

ஆசனப் பதிவு உண்டு.

அன்பளிப்பு:

| S. V. முருகேசு<br>154, ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம் | குகன் ஸ்ரோர்ஸ்<br>180, ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம் |
|---|---|
| Rasams Communication<br>10, (333) Hospital Road,<br>New Market, Jaffna. | Tharons Communication<br>153, Ponnalai Road,<br>Manipay.<br>T. P. 021-2855 |

(சி/11802)

# பௌத்தர்கள் இனவாதிகள் அல்லர்; நோர்வேக் கொடி எரிப்பு தவறானது

## பெல்பொல விபஸ்ஸி தேரர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 13

பௌத்தர்கள் இனவாதிகள் அல்லர். ஜனாதிபதி மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளுக்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நோர்வேக் கொடி பௌத்த பிக்கு ஒருவரால் எரிக்கப்பட்டது தவறான சம்பவம் ஆகும்.

சர்வதேச பெல்பொல விபஸ்ஸி அமைப்பின் பணிப்பாளரும் இலங்கை- ஜப்பான் நட்புறவுச் சங்கத் தலைவருமான பெல்பொல விபஸ்ஸி தேரர் கண்டி ரஜமஹா விகாரையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றியபோது மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும்தெரிவித்ததாவது:-

சகல பௌத்தர்களினதும் உள்ளங்களில் கருணை, நேர்மை இருக்க வேண்டும். நாம் நமக்கு நேர்மையானவர்களாக இருக்க வேண்டும்.

24 மணி நேரமும் மத அனுட்டானங்கள் செய்யப்படும் பல மதங்கள் உள்ள இந்த நாட்டில் நேர்மை, ஒழுக்கம் எதுவும் கிடையாது.

இன்று கற்றுத் தேர்ந்த பிக்குமார்படிப்படியாக அருகி வருகின்றனர் புத்தசாசனத்தை முன்னெடுத்துச் செல்ல கற்ற பிக்குமார் தேவை. பாதுகாப்புப் படைக்கு தமது பிள்ளைகளைச்சேர்ப்பது போல புத்த சாசனத்தைக் காக்கவும் பிள்ளைகளை அனுப்ப வேண்டும்.

நாம் வெல்ல வேண்டிய பல சவால்கள் எம்முன் உள்ளன. நாடு சிறைக்கூடமாக மாறியுள்ளது. வீதிகள் தோறும் சோதனைச் சாவடிகள். உடலைச் சோதனைக்கு உட்படுத்தாமல் எங்கும் போக முடியாது.

சிங்கள மக்கள் பிரிந்திருப்பதனாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. பிக்குகள், எம்.பிக்கள், அமைச்சர்கள் எல்லோரும் நாட்டின் தேசிய சொத்துக்கள், அவர்களைக் காப்பது எமது பொறுப்பு. சிங்கள மக்கள் நேர்மையாக நடந்து கொள்வார்களேயானால் கொழும்புக்குக் கொண்டுவரப்படும் குண்டுகளில் 99 சதவீதமானவற்றைத் தடுக்க முடியும். சிங்களவர்கள் ஒற்றுமையின்றி மோதிக்கொள்வதாலேயே நாடு இந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது — என்றார்.

அஸ்கிரிய விகாரையில் நடைபெற்ற சாகித்தியப் போட்டி பரிசளிப்பு விழாவில் உரையாற்றிய அஸ்கிரிய பீடாதிபதி உடுகம ஸ்ரீ புத்தாக்கித தேரர் தெரிவித்ததாவது:-

ஒரு நாட்டின் தேசியக் கொடியை எரிப்பது நல்லதல்ல. காவி உடைதரித்த பிக்கு ஒருவர் ஒரு நாட்டு தேசியக் கொடியை எரித்ததன் மூலம் பிக்குகள் மீதுள்ள கௌரவத்துக்கு இழுக்கு ஏற்படுத்தியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் நோர்வே நாட்டுக் கொடியை பிக்கு ஒருவர் எரித்தது பொருத்தமற்றது. தங்களது எதிர்ப்பை வேறுவிதமாகக் காட்டியிருக்கலாம். பிக்குமாரின் தற்போதைய நிலை குறித்து சந்தோஷப்பட முடியாது.

உயர்கல்வி பெற்று பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறும் இன்றைய இளம் பிக்குமார்கள் தமது தாய், தந்தை, ஆசிரியர் போன்றோரை மதிப்பதில்லை. அத்தகைய பிக்குமார் எவ்வளவுதான் கற்று உயர் நிலைக்கு வந்தாலும்அவர்களுக்கு மதிப்பிருக்காது என்றார்.

(இ-4)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

மூளாய் கிழக்கு சுழிபுரத்தைச் சேர்ந்த திருமதி சோமசுந்தரம் பராசக்தி என்பவரது தேசிய அ. அட்டை (358601405X) விசேட அ. அட்டை இரண்டும் 8-4-2000 அன்று யாழ். பஸ் நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

(75333)

சின்னத்துரை தெய்வேந்திரம் என்பவரது விசேட அடையாள அட்டை, தேசிய அ. அ. (இல:520044655 V), மினிபஸ் அ. அட்டை என்பன மனோகரா தியேட்டருக்கும் கைலாச பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைத்து உதவவும், விலாசம். தாவளை, ஜெற்றாளை கொடிகாமம்.

(75337)

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி (Broiler) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்கள் மட்டும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: கல்லூரி ஒழுங்கை, வட்டுக் கோட்டை

(75318)

இறைச்சிக்கோழி Broiler மற்றும் சேவல், கல்பேட்ஸ் விறாத்துக் குஞ்சு என்பன மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குஉண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இல. 68, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.

(75354)

### O/L கணிதம்

அடிப்படையிலிருந்து விஷேட திறமை பெறுபேறுகளை நீங்கள் பெற்றிடத் தனிப்பட்ட முறையிலோ சிறு குழுக்களாகவோ கணிதம் I.II இலகுவான முறையில் கற்பிக்கப்படும். திறமைச் சித்திக்கு உத்தரவாதம் அளிக்கப்படும். பெற்றோருடன் வந்து தொடர்பு கொள்ளவும். தொடர்புகளுக்கு:- Kana Pararajasekaran 8A, பிளர்ச்சர் ஒழுங்கை, (சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில்) சுண்டுக்குளி.

[75310]

### வேலைக்கு ஆள்தேவை

கோழிகள், ஆடுகள் வளர்ப்பதில் மேற்பார்வையிட்டு நன்றாகச் சமையல் செய்யக் கூடிய பெண் வேலைக்குத் தேவை. சாப்பாடும் நல்ல சம்பளமும்தரப்படும். தொடர்பு: தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர்.

(75288)

### பசுவைக்காணவில்லை

கறவைப் பசுவும் கன்றும் கடந்த 10-04-2000 முதல் காணாமற் போய்விட்டன. கறவைப் பசு — பட்டிபார்த்த மெல்லிய கொம்பு, கழுத்தில் சயிறு வளையம், மேனி முழுவதும் பிறவுன் நிறம் பசுக் கன்று கழுத்தில் தேடா வளையக் கயிற்றுடன், மண் நிறம் 7 மாத கால பசுக் கன்று இதனைக் காண்பவர்கள் அல்லது இது பற்றி தகவல் அறிந்தவர்கள் யோ. மரியநாயகம் 42, மாட்டின் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அறிவிக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(75347)

## தொடர்பு கொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13

மாசேரி, வரணியைச் சேர்ந்த நீலன் கணேசன் என்பவரைத் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு செஞ்சிலுவை சர்வதேசக்குழு கோரி உள்ளது. (இ)


**Institute of Art Training**

**J.A.T**

76, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம்.
(இந்து மகளிர் கல்லூரிக்கு பின்புறமாக)

**A/L சித்திரம்**

2001, 2002 புதிய பிரிவுகள் ஆரம்பமாகி உள்ளன.
(பிரபல ஆசிரியர் குழு)

(75371)


## தேநீர் விருந்து

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்று 1999 க. பொ. த. (சா) தரப் பரீட்சையில் 8D க்கு மேல் பெற்றுப் பாராட்டுக்குரியவர்களாக விளங்கும் மாணவ, மாணவியர்களை 15 - 4 - 2000 சனிக்கிழமை பிற்பகல் 3. 30 மணிக்குப் பாராட்டும் முகமாகப் பாடசாலைக்கு வருகைதருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர். ஆசிரியர்கள்.

**யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.**

(75358)

## பிற்போடப்பட்டுள்ளது

சுன்னாகம் அரிமா கழக செயற்பாட்டு நிதிக்காக கீழ்க்காணும் இரு நாடகங்களும் 16-04-2000ஆம் திகதி இராமநாதன் கல்லூரியில் அரங்கேற்ற இருந்து தவிர்க்க முடியாத காரணத்தால் இந்நிகழ்வு பிற்போடப் பட்டுள்ளது. அத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

''அக்கினிப் பெருமூச்சு''
''தாட்சாயனி கல்யாணம்''

செயலாளர்
லயன்ஸ் கழகம்
சுன்னாகம்

(சி/11822)

## யா/மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமும் பாராட்டு விழாவும்

16 - 04 - 2000 ஞாயிற்றுக்கிழமை காலை 10. 00 மணிக்கு நடைபெறவிருக்கும் பொதுக் கூட்டத்தில் 1997 க. பொ. த உ/த பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் பாராட்டப்பட உள்ளனர். அவர்கள் அனைவரையும் பாராட்டு விழாவில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பொ. சுந்தரலிங்கம்
தலைவர் (ப.மா.ச)

இணைச்செயலர்: ந. போஜன்
சி. தேவகுமார்

(75356)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னுத்துரை பாலசுந்தரம்

(இளைப்பாறிய தொழில் நுட்ப உத்தியோகத்தர் — (T.O பெருந் தெருக்கள்)

துன்னாலை வல்லியானந்தப்பிள்ளையார் கோயிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரான பாலசுந்தரம் 11 - 04 - 2000 அன்று கொழும்பில் சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் பொன்னுத்துரை மீனாட்சிப்பிள்ளையின் அன்பு மகனும் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், சிறீஸ்கந்தராஜா (கணக்காளர் லண்டன்), விஜயகுமார் (தொழில் நுட்ப உத்தியோகத்தர், வவுனியா), டாக்டர் சந்திரவதனி (பேராசிரியர், கிழக்கு பல்கலைக்கழகம்), திருமதி ராகவன் (ஆராதனாஸ் நகை மாளிகை — கண்டி), திருமதி சரவணபவான் (துன்னாலை கட்டைவேலி ப. நோ. கூ. சங்கம்) திருமதி யோகலிங்கம் (ஜேர்மனி), திருமதிசங்கர்(ஜேர்மனி) சத்தியபாமா (யாழ். பல்கலைக்கழகம் 3 ஆம் வருட முகாமைத்துவ வர்த்தக பீடம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு பொறளை மலர்ச்சாலையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு 11ம் திகதி 10 மணியளவில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்,

தகவல்;
திரு. சோ. சரவணபவான்
கிளைமுகாமையாளர்,
(கட்டைவேலி, நெல்லியடி, ப. நோ. கூ. சங்கம்)

(சி/11823)

### பஸ்ரியன் றோமபாலா

(உரிமையாளர் றோமாஸ் ஸ்ரோர்ஸ், புங்குடுதீவு)

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 115 ஸ்ரேசன் றோட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. பஸ்ரியன் றோமபாலா அவர்கள் 12—04—2000 புதன்கிழமையன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி பஸ்ரியன் தம்பதிகளின் அன்பு மகனும், அமலஉற்பவத்தின் அன்புக் கணவரும், வைத்திய கலாநிதி திருமதி றோஸ் இராஜரெட்ணம், பிரான்சிஸ்(லண்டன்), ரிலியட் வெலிஷியா (ஆசிரியை புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், வைத்திய கலாநிதி க. இராஜரெட்ணம் (புங். நயி. ப. நோ. கூ. ச. தலைவர்), பிரான்சிஸ்கா (கொழும்பு) ஆகியோரின் மாமனும் றஜனிகாந், றஜீபா, றஜனியா, எழின் ஆகியோரின் அன்புப் பேரனும் திரு. திருமதி ஜோன் பிள்ளையின் அன்பு மருமகனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 13—04—2000 இன்று வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு 115, ஸ்ரேசன் றோட் இல்லத்தில் இருந்து புனித அடைக்கல அன்னை ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Dr. இராசரெட்ணம்
(மருமகன்)

இரெட்ணம் வைத்தியசாலை,
115, ஸ்ரேசன் றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 021—27260

(75365)

# உதயன்

## மனமாற்றம் வரட்டும்!

"நாளைக்கு நாம் எந்த மனதுடன் சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடுவது? எங்கள் பிராந்தியத்தின் இரண்டு பிரதேசங்களைச் சேர்ந்த எமது சகோதர சகோதரிகள், உறவுகள் போரின் கொடிய கரங்களுக்குள் அகப்பட்டு, அவஸ்தையுற்று, அவலப்படும் போது; தங்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு மனப் பீதியுடன் வாழ்க்கை வெறுத்து நிர்க்கதிக்கு ஆளாகியிருக்கும் வேளை; எமக்கு ஒரு கொண்டாட்டமும் தேவையா?" —

புத்தாண்டுக்கு முந்திய நாளான நேற்று, குடாநாட்டில் பல வீடுகளில் எழுந்த மன நிலைக் கோலத்தின் வடிவமே மேற்கண்ட கேள்விகள்.

இனி நல்லது நடக்கும் என்ற நம்பிக்கையை ஊட்டும் நன்னாளாகவே புத்தாண்டுப் பிறப்புக் கொள்ளப்படுவது வழக்கம். வீட்டிலும் நாட்டிலும் சிறப்புகள் பலவும் தருவதற்கு அது மலர்வதாக நம்புவது உண்டு.

ஆனால், யாழ்ப்பாணத்து மக்கள் புத்தாண்டைக் கொண்டாட இயலாத நிலையில் நொந்து போயுள்ளனர். யாழ்ப்பாண மக்கள் மட்டுமன்றி, வடக்கு — கிழக்கில் வாழும் தமிழர்கள் எல்லோரும் இதே நிலையில் தான் உள்ளனர்.

சித்திரைப் புத்தாண்டை சிங்கள — தமிழ்ப் புத்தாண்டு என்று பெயரிட்டு, இரு இனத்தவர்களின் கொண்டாட்டங்களில் ஒற்றுமைகள் பலவும் இருப்பதாக விதந்து எழுதப்படுவது உண்டு. அதனை அகில இலங்கை ரீதியான தேசிய திருநாளாகக் காட்டி சிங்கள — தமிழ் மக்களிடையே ஒற்றுமையைக் கட்டி எழுப்ப உதவும் பெருநாள் என்று அரசியல்வாதிகள் கத்துவதும் வழக்கம்.

கடந்த பல தசாப்தங்களாக சித்திரைப் புத்தாண்டை ஒற்றுமை நாளாகப் பார்த்திருப்பினும், அதனைப் 'போற்றிய' போதிலும் இன்னும் அது அவ்வாறு அமையவில்லை. அது ஈழ மக்கள் அனைவரினதும் துரதிர்ஷ்டமும் நாட்டின் சாபக்கேடுமாகும்.

போரை நிறுத்தி, சமாதான — அரசியல் — பேச்சுவார்த்தைகள் மூலம் இனப் பிரச்சினைக்கு நீதியான தீர்வு ஒன்றைக் காண்பதற்கு உருப்படியான, ஆக்க பூர்வமான உண்மையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அவை வெற்றி அளித்தால் மட்டுமே இனிமேல் புத்தாண்டு மற்றும் பண்டிகைகளை மனக்களிப்புடன் கொண்டாடும் நிலை மக்களிடம் உருவாகும்.

தமிழ் மக்கள் மட்டுமன்றி, சிங்கள மக்களிடையேயும் புத்தாண்டைப் பழைய மனக்களிப்புடன் கொண்டாடும் தன்மை குறைந்திருப்பதாகத் தெற்குத் தகவல்கள் தெரிவிக்கின்றன. போரின் தாக்கமும், பொருளாதார மாறு நிலைகளுமே இதற்குக் காரணங்கள் என்று அவதானிகள் சொல்கின்றனர்.

புத்தாயிரம் ஆண்டின் சிங்கள — தமிழ்ப் புத்தாண்டு இரு தரப்பினராலும் மனநிறைவுடன், தெம்புடன், களிப்புடன் கொண்டாட முடியாத நிலை யாரால் உருவானது?

தமிழ் மக்களின் பிறப்புரிமைகளைக் கூட வழங்குவதற்குப் பின்னடித்த — இனப்பிரச்சினையை தமது சுய அரசியல் லாபத்துக்குப் பயன்படுத்திய— தென்னிலங்கையின் அரசியல் தலைவர்களே இப்போதைய கொடிய நிலைக்கு மூலகர்த்தாக்கள்.

இந்தப் புத்தாண்டேனும் அவர்களிடம் மனமாற்றத்தை, உண்மையான நாட்டுப்பற்றைக் கொண்டு வர வழிசெய்யட்டும்.

# யாழ்ப்பாணம் கல்விக் கல்லூரிக்கு தெரிவுசெய்யப்பட்ட 97 பேரின் விவரம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13

அடுத்தமாதம்முதல்இயங்க உள்ள யாழ். தேசிய கல்விக் கல்லூரிக்கு 97 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை இம் மாதம் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு முக்கிய கலந்துரையாடலுக்காக பெற்றோர் அல்லது பாதுகாவலர்களுடன் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் சமுகமளிக்குமாறு பீடாதிபதி ரி. கமலநாதன் அறிவித்துள்ளார்.

அவர்கள் விவரம் வருமாறு:

### ஆரம்பக்கல்வி

ஆண்கள்:- கே. சுகுமர் (மானிப்பாய்), பி. லம்போதரன் (கொல்லன்கலட்டி) எம். வசந்தரூபன் (அளவெட்டி), எஸ். முரளிதரன் (குப்பிளான்), கே. சுதர்ஜன் (வவுனியா), ஆர். சங்கரன் (சண்டிலிப்பாய்), பி. இராஜேஸ்வரன் (யாழ்.), இ. கிருபாகரன் (புன்னாலைக் கட்டுவன்), என். திருவாசகன் (வரணி), கே. ஈஸ்வரகுமார் (ஆனைக்கோட்டை).

பெண்கள்;- பி. தீபா (நீர்வேலி), பி.கல்பனா(மூளாய்), கே. வளர்மதி(கொடிகாமம்), என். நாகேஸ்வரி (அனலைதீவு), எஸ். கலைவாணி (துன்னாலை), என். நந்திகா (அல்வாய்).

ஜி. அகல்யா (கரவெட்டி), ஏ. சுசிர்ஜினி (எழுதுமட்டுவாள்), ஆர். வான்மதி (உடுவில்), வி.சிவாஜினி(கைதடி), எஸ். சிவேஷ் (நீர்வேலி), டி. தயாளினி (சாவகச்சேரி), ரி ஜெலினா (தூதாவளை), ஏ. முகுந்தினி (வல்வெட்டுத்துறை), எம். பாரதி (சித்தன்கேணி), ரி. சுகந்தினி (இணுவில்), எஸ். சுதஷினி (குப்பிளான்), பி. ரேணுகா (கந்தரோடை), எஸ். சகுந்தலாதேவி (மயிலிட்டி), கே. அனுஷாம்பிகை (பெரியபளை).

### விஞ்ஞானம்

ஆண்கள்:- வை. பிரசன்னா (கந்தர்மடம்), கே. சுதர்ஷன் (துணுக்காய்), எஸ். பிரகாசன் (சாவகச்சேரி), எம்.கெங்காதரன்(ஏழாலை). எஸ். அரவிந்தன் (சுழிபுரம்), வி. சுதாகரன் (நீர்வேலி), என். சுகிர்தன் (எழுது மட்டுவாள்), எஸ். செந்தூரன் (இணுவில்), ஏ. சேந்தன் (சுழிபுரம்), வி. ரமேஸ்குமார் [சாவகச்சேரி]

பெண்கள்:- கே. வசந்தகுமாரி (புலோலி), ஜி. சுபாஜினி (மொறட்டுவ), எஸ். சுபாசினி [கந்தரோடை), எஸ். துஷிதா (கொழும்பு), கே. யோகேந்திரி (மட்டுவில்), ரி. கௌசலா (ஒட்டுசுட்டான்), ஆர். தவேரி (கொக்குவில்), எம். ஸ்ரீகவிதா (கொழும்பு), கே. பிரணவமலர் (கந்தர்மடம்), ஆர்.குமுதினி (சுன்னாகம்),கே. வாசுகி (மன்னார்), எஸ். கலைச்செல்வி (மாவிட்டபுரம்), என். தவமலர்(கொடிகாமம்), வி. சாந்தினி (ஏழாலை). கே. ஐ ஏஞ்சலா (ஆனைக்கோட்டை), கே. யாழினி (மானிப்பாய்), ரி. கார்த்திகா (பருத்தித்துறை), ஜி. நிவேதிதா (கந்தர்மடம்), என். குழதாஜினி (கொழும்பு). எம். கல்யாணி (யாழ்)

### கணிதம்

ஆண்கள்:- பி. ஜெகன்(வல்வெட்டித்துறை), ரி. ரஜனிகாந் (மட்டக்களப்பு), வி. றஜீவன் (வவுனியா), எஸ். பாலமுரளி (இணுவில்), கே. திருமுருகன் (கரவெட்டி).

பெண்கள்:- ஆர். ஜெகவதனா (வவுனியா), ரி. தர்சினி (வரணி), வி. பிரியதர்சினி (கொக்குவில்), பி. சூர்யகுமாரி (வவுனியா). எம். சுதாஜினி (மட்டக்களப்பு), பி. ஹேமா(பருத்தித்துறை), எம். மயூரதி (உரும்பிராய்), கே. உமாகாந்தி (அம்பாறை), எம். ஜனார்த்தனி (வவுனியா), ஜி ஜெகதீஸ்வரி (வவுனியா).

### நடனம்

பெண்கள்: ஏ. ஜே. சர்மிலதா (மட்டக்களப்பு), ரி. பிறேமிளாதேவி (மட்டக்களப்பு), கே.குமாரிசந்தினி (மட்டக்களப்பு), என். கம்சானந்தினி(அம்பாறை),என். தாரணி (கேகாலை),எஸ்.சிவதர்சினி (மட்டக்களப்பு), பி. கஸ்தூரி (வவுனியா).

### சங்கீதம்

பெண்கள்: பி. தேனுஷா (திருமலை), கே. கௌசலா (முல்லைத்தீவு),கே. குமுதினி (யாழ்). கே. சுரந்தினி (திருமலை), எவ்.ஜே. குறூஸ் (மன்னார்), என். தயாளினி (கந்தரோடை), பி. பாமலோஜினி (சண்டிலிப்பாய்), ஆர். சுகந்தினி (மல்லாவி), ரி. சித்ரா (திருமலை), கே. குனேஸ்வரி (கிளிநொச்சி), ரி. லோயனா (திருமலை), ஆர். ஜெயந்தினி (வவுனியா), கே. நட்பினி(கோண்டாவில்),

### சித்திரம்

பெண்கள்; ரி. பகீரதி (யாழ்), ஏ. அனிட்டா ராஜினி யாழ்). (இ–க)

## நூல் நிலைய ஆரம்ப வைபவம்

வலிகாமம் தெற்கு,ஏப்ரல் 13

அளவெட்டி முற்போக்கு வாலிபர் சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் நூல் நிலைய ஆரம்ப வைபவமும் இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு இ. சிவநாயகம் தலைமையில் நடைபெறும்.

போரூட் நிறுவன திட்ட முகாமையாளர் திருமதி அனி நூல் நிலையத்தைத் திறந்து வைப்பார்.

சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் செ. தவநாயகம், முன்னாள் தலைவர் மா. பஞ்சலிங்கம். போரூட் நிறுவன திட்ட இணைப்பாளர் கே. குனேந்திரதாசன், போரூட் சமூக அபிவிருத்தி இணைப்பாளர் வி. என். மூர்த்தி மற்றும் கிராமசேவை உத்தியோகத்தர்கள் திருமதி ம. மாலாதேவி, ந. முருகதாஸ் உட்பட பலர் இந்த நிகழ்வில் கருத்துரை வழங்க உள்ளனர்.

திருமதி அனி சிறப்புரை நிகழ்த்துவார்.

(இ–152)

## புத்தாண்டு விழா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13

தீவகக்கல்வி வலயம் நடத்தும் சித்திரைப் புத்தாண்டு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மண்டபத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை, ஊர்காவற்றுறைப்பிரதேச சபைத் தலைவர் என். மதனராஜா ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும் —

தீவுப்பகுதி தெற்கு, வேலணை உதவி அரசாங்க அதிபர் க. இரத்தினம், ஊர்காவற்றுறை மற்றும் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம், தீவகக்கல்வி வலய முன்னாள் நிர்வாக உதவியாளரும் தற்போது மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் அலுவலகத்தில் பிரதம எழுதுவினைஞராகக் கடமையாற்றுபவருமான பூ. புலேந்திரராஜா (நல்லை அமிழ்தன்) ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் —

தீவுப்பகுதிகளைச் சேர்ந்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

தீவகக்கல்வி வலயகலாசார உத்தியோகத்தர்கள் இந்த விழாவை ஒழுங்கு செய்துள்ளனர். (ஐ-7-111)

## ஆயிலியபூசை

யோகசுவாமிகளின் ஆயிலிய பூசையும் அன்னதானமும் இன்று வியாழக்கிழமை நண்பகல் நல்லூர் தேரடியிலும் —

விசேட பூசை ஆராதனைகள் பிற்பகல் 3 மணிக்கு கொழும்புத்துறையில் உள்ள சுவாமிகளின் சமாதிக் கோயிலிலும் இடம்பெறவுள்ளன.

### உதய வாக்கு

ஆலயம் அந்தஸ்தையும், ஆடம்பர வாழ்க்கையையும் துறக்கச் செய்தது. ஐம்புலன்களால் அனுபவிக்கப்படும் இன்பத்தை, காதலின் கனிவை, இதய இன்பத் துளிகளை, மனைவி மக்களின் அன்யணைப்பை, ஆசைமுத்தங்களைத் துறக்கச் செய்தது

— இங்கர்சால்

## சாயி சிந்தனை

ஹ்ரித்+தயா என்பது ஹ்ருதயம் இதயம் முழுதும் இரக்கத்தால் நிரம்பி இருக்க வேண்டும். இரக்கம் என்பதே உண்மையான அன்பு. அன்பில்லையெனில் இதயமே இல்லை என்றாகும். மனிதனுடைய உண்மையான இயல்பே அன்புதான். நம்மைச் சுற்றியுள்ளவரிடம் நாம் இந்த அன்பைப் பரிந்துகொள்ள வேண்டும். ஒரு நாளைக்கு ஐந்து பேரிடமாவது அன்பு செலுத்த முயல வேண்டும். கரங்களால் தானம் செய்ய வேண்டும். நமது அன்பை எல்லோரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

(ஆதாரம்:- சனாதனசாரதி)

## நாளை

சித்திரை 2

வெள்ளிக்கிழமை

திதி: ஏகாதசி

பின்னிரவு 2.19 வரை

நட்சத்திரம்: மகம்

பின்னிரவு 2.11 வரை

ஏகாதசி விரதம்

சுபநேரம்: 6 04 – 7 34

ராகுகாலம்: 10 34 -12 04

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## கலை விழா

சுழிபுரம், ஏப்ரல் 13

பண்ணாகம் தாசன் கல்வி நிறுவனம் நடத்தும் புத்தாயிரமாம் ஆண்டுக் கலை விழா இன்று வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு பண்ணாகம் ஸ்ரீ முருகன் அன்னதான சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகமும் சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு பெற்ற ஆசிரியர் சி. ஞானச்சந்திரமூர்த்தி, பண்ணாகம் கிராம அலுவலர் திருமதி தி சிவபாக்கியநாதன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக ஆசிரியர் ச. ஐங்கரனும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் மேற்படி நிறுவனத்தால் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டிகளில் சிறப்பிடம் பெற்றோரின் பேச்சுக்கள் மற்றும் பரிசளிப்பு, கலைநிகழ்ச்சிகள் என்பன இடம் பெறும். (க-28)

## அகதிகளுக்கு உதவி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13

வடமராட்சி கிழக்கின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இடம்பெயர்ந்து, தும்பளை, லூர்து மாதா கோயிலில் தங்கியுள்ள அகதிகளுக்கு பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதாசேவாச்சிரம செயலர் சுவாமி சித்ரூபானந்தா அவசர உதவிகளை வழங்கியுள்ளார்.

இங்கு தங்கியுள்ள சுமார் 495 பேரில் 145 பேர் குழந்தைகளாவர். இக்குழந்தைகளுக்கும், கர்ப்பிணித் தாய்மாருக்கும் இரண்டு வாரங்களுக்குப் போதுமான பால்மா வகைகளும் மற்றும் பானைகளும் வழங்கப்பட்டன.

இப்பால்மா வகைகள், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க, பருத்தித்துறைக் கிளையிடம் ஒப்படைக்கப்பட்டு, செஞ்சிலுவைச் சங்க தொண்டர்கள் மூலம் தினமும் கரைத்த உணவாகவே வழங்கப்படுகின்றன.

(இ–17)

## தவக்காலச் சிந்தனை

(37 ஆம் நாள்)

மண்வெட்டி கையிலெடுத்து மாடாய் உழைக்கும் பாட்டாளி முதல் விண்கலத்தில் பவனிவரும் விஞ்ஞானி வரை இறைவனால் அழைக்கப்பட்டவனே.

அன்று இறைவன் தன் மீட்புத்திட்டத்தை நிறைவேற்ற ஆபிரகாமை அழைத்தார்.

"மிகப் பெருமளவில் உன்னைப் பலுகச் செய்வேன்
உன்னிடமிருந்து நாடுகளை உருவாக்குவேன்
உன்னிடமிருந்து அரசர்கள் தோன்றுவார்கள்"

(தொ. நு 17. 6) என வாக்களித்ததிற்கு இணங்க இன்று மண்ணுலகெங்கும் ஆபிரகாமின் சந்ததி பெருகச் செய்தார்.

ஆனாலும் மனிதன் தன் அழைப்பினை மறந்து கடவுளைத் துறந்து மனம் போன போக்கில் வாழத்தலைப்பட்ட போது தம் மகனையே இவ்வுலகிற்கு அனுப்பி எம்மை மீட்டார்.

என் வார்த்தையைக் கடைப்பிடிப்போர் என்றுமே சாகமாட்டார்கள் என்று உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். இயேசுவின் பொன் மொழிக்கேற்ப எம் வாழ்வை இறைவன் பால் திசைதிருப்பி எம் அழைப்பின் மகத்துவத்தினை உணர்ந்து வாழ்வோம்.

மரியா
(இளவாலை)

## மணிக்குரல் விளம்பர சேவையின் 27ஆவது ஆண்டு விழா

இன்று 13-04-2000யாழ். மத்தியகல்லூரியில்
பிற்பகல் 1 மணிமுதல் மாலை 6 மணிவரை
★ பாட்டுக்குப்பாட்டு ★ தேன் இசைமழை
★ மேற்கத்திய நடனம்
சாரங்கா இசைக்குழு வழங்கும்

**ராஜராகம்**

கட்டணம்: 25/-, 20/-

(75350) மணிக்குரல்



## HUMANITARIAN HELP DESK PROJECT

### Post of Desk Officer

Essential Requirements

1. Fluency in verbal and written English
2. Good Communication and Inter personnel skill
3. Good knowledge about NGO's, UN Agencies, ICRC, HRC etc.
4. Ability to collect, collate and interpret data/ information in precise and effective manner.
5. Willing to work extra hours without remuneration.

Preferable requirements

1. Ability to ride motor cycle
2. Computer skills in windows, word processing, database software and e-mail.
3. Possess leadership qualities.

Women are encouraged to apply.

Apply with Bio-data and with names of two non-related refrees to reach on or before 22 - 04 - 2000.

**The Chairman,**
**Council of NGO's,**
48, Nallur Cross Road,
Jaffna.

(75314)


## மனைவியின் காதைக் கடித்தாராம்

நெல்லியடி, ஏப்ரல் 13

மது போதையில் வீட்டினுள் புகுந்த கணவன் அங்கு படுத்திருந்த தனது மனைவியின் காதைக் கடித்தாராம்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வடமராட்சியிலுள்ள தும்பளையில் இடம்பெற்றது.

தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்திற்கு அருகில் வசிக்கும் பெண்ஒருவருக்கே இந்நிலைஏற்பட்டது அவர் தற்போது மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ–109)

## பலிக்களம் திருப்பாடுகளின் காட்சி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13

திருமறைக்கலாமன்றம் வழங்கும் திருப்பாடுகளின் காட்சி பலிக்களம் நாளை வெள்ளிக்கிழமை முதல் 3 நாள்கள் நடைபெறும்.

திருமறைக் கலாமன்ற கலையரங்கில் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று நாள்களும் பிற்பகல் 6.15 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெறும்.

(க)

## உதவிப்பணம்

நெல்லியடி, ஏப்ரல் 13

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் மற்றும் சமூகசேவைத் திணைக்களத்தால் வழங்கப்படும் ஏனைய உதவிகள் ஆகியவற்றைப் பெறுபவர்கள் தமது தற்காலிக முகவரியை அம்பனில் உள்ள நிரந்தர உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலும் தும்பளையில் தற்காலிகமாக இயங்கும் அவசரகால உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலும் பதிவு செய்து கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு உதவி அரசாங்க அதிபர் வி. பி. வேலாயுதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

(க–109)


## மகாநதிஜுவல்லறி

சித்திரைப் புதுவருடத்துடன்!
★ ஆடவர், மங்கையர், சிறியோர்க்கான ரெடிமேட் தங்க, வைர நகைகளுக்கு வேறெங்கும் காணமுடியாத அளவில்
புதுப்புது டிசைன்களில்
பெற்றுக்கொள்ள இதோ!

**மகாநதி ஜுவல்லறி**

72A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தங்கத்தின் தரம் நிரந்தரம்!
தரம் நாடுவோர் நாடுமிடம்!
யாழ். நகரில்
மகாநதி ஜுவல்லறி
எம் அன்புக்குரிய அனைவர்க்கும்
புத்தாண்டு வாழ்த்துக்கள்

(75283)



மானிப்பாய்

## பரிஷ் லயன்ஸ் கழகம்

## இலவச கண் பரிசோதனை முகாம்

இடம்: யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
காலம்: 16. 04. 2000 (ஞாயிற்றுக்கிழமை)
காலை 8. 30 மணிக்கு (இ. நே.)

கண்பார்வை பரிசோதனை மேற்கொள்பவர்கள்

யாழ். பிரபல S. M. பெர்னாண்டோ நிறுவனத்தினர் பெயர்களை அன்று காலை மேற்படி கல்லூரியில் பதிவு செய்து கொள்ளலாம்.

வசதி குறைந்தோருக்கு மூக்குக் கண்ணாடிகள் பிறிதொரு தினத்தில் இலவசமாக வழங்கப்படும்.

லயன் R. சிவயோகன்
தலைவர்

லயன் C. கேசவராஜன்
கண் சேவை திட்டக்குழுத் தலைவர்

(75332)


## முதலாம் ஆண்டு நினைவலைகள்





**அமரர் கந்தப்பு பாலகிருஷ்ணன்**
(சட்டத்தரணி, முருகேசு அன் நீலகண்டன் நிறுவனம், கொழும்பு)
அன்னைமடியில்: 13-11-1944
ஆண்டவன்அடியில்: 26-04-1999
திதி: 14 - 04 - 2000

**அமரர் சிதம்பரப்பிள்ளை லோகநாதன்**
(நீர்ப்பாசன பொறியியலாளர், பெரியமடு, மன்னார்)
அன்னைமடியில்: 23-05-1948
ஆண்டவன்அடியில்: 24-04-1999
திதி: 13 - 04 - 2000

உறவோடு பற்று வைத்து
உறவுக் கெல்லாம் நிழல் கொடுத்து
வேரோடு சாய்ந்த உங்கள்
வேதனையில் தவிக்கின்றோம்.
எங்கள் உயிர்க் காதரவு
உங்கள் துணை என்றிருந்தோம்
வந்த கடன் முடிந்ததென
விதி வழியே சென்றுவிட்டீர்கள்.
ஓராண்டு ஆயிரமாய் மாறிடினும்
உங்களை நாம் மறவோம்.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
– குடும்பத்தினர்

'நாவலர் இல்லம்',
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

(75134)

## 11 ஆம் ஆண்டு நீங்காத நினைவு



**அமரர் S. T. சந்திரகுமார்**
(கிராம சேவையாளர், கரம்பன் மேற்கு)
அழிப்பு:- 14-04-1989

அன்பு நிறைந்த மகனே, ராசா, தம்பி அன்று உமக்கு நடந்த நிகழ்வு இன்றும் நினைக்கும் போது எங்களின் மனம் வேதனையடைகின்றது.

உமது நினைவோடு வாழும்
அம்மா:- செ. பாக்கியம்
அக்கா:- S. T. சகுந்தலாதேவி

40/05, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

(75214)

# வீண் உயிரிழப்புக்களைத் தவிர்க்க மக்கள் இடம்பெயர அனுமதி வழங்குக

## வவுனியா வளாக மாணவர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை

வவுனியா, ஏப்ரல் 13

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மக்களை மனித கேடயமாகப் பயன்படுத்தாது அவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து செல்ல அனுமதிக்க வேண்டும். அதன் மூலம் பெரும் உயிரிழப்பைத் தவிர்க்க முடியும் என்பதைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறோம்.

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர் ஒன்றியம் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள அவசர கடிதத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

வவுனியா அரச அதிபர் ஊடாக அவர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள அவசர 'பக்ஸ்' செய்தியிலேயே இதைத் தெரிவித்துள்ளனர்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவில் வெடித்துள்ள யுத்தம் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர விரும்புகின்றனர்.

ஆனால், இந்த மக்கள் இடம்பெயர பாதுகாப்புப் படையினர் அனுமதி மறுத்துள்ளனர். மக்கள் பெரும் பதற்றத்துடன் உள்ளனர்.

யுத்தப் பிரதேசங்களில் வாழும் மக்களை மனித கேடயமாகப் பாவிக்க முனைவதை நிறுத்த வேண்டும். மனிதாபிமானச் சட்டங்களின் படி அவர்கள் விரும்பிய இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படவேண்டும்.

எனவே இது விடயத்தில் உடன் தலையிட்டு அப்பாவி மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் எனக் கோருகின்றோம்.

இந்த மக்களின் பிரச்சினை தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சாத்வீகமான முறையில் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அவர்கள் நடத்தும் இந்தப் போராட்டத்துக்கு நாம் தார்மீக ஆதரவை வழங்கி வருகின்றோம்.

நாட்டின் தலைவர் என்ற முறையில் சகல மக்களையும் சமமாக நடத்தும் வகையில் இந்த மக்களின் உயிரைக் காப்பாற்ற உதவவேண்டும்— என்றுள்ளது. (இ-3-165)

## கணித விஞ்ஞான வள நிலையம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் இரண்டாவது கணித விஞ்ஞான வள நிலையம் கோப்பாய் மகாவித்தியாலயத்தில் கடந்த 5 ஆம் திகதி யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செல்வராணி மகாலிங்கத்தினால் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், முதன்மை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வள நிலைய இணைப்பாளராக ஆ. குகதாசன் நியமிக்கப்பட்டுள்ளார். [க]

## சண்டிலிப்பாய்ப் பகுதியில் 32 குடும்பங்கள் தங்கியுள்ளன

சண்டிலிப்பாய், ஏப்ரல் 13

பச்சிலைப்பள்ளி மற்றும் பளைப் பிரதேசத்தில் போர்ச் சூழல் காரணமாக இடம்பெயர்ந்த 32 குடும்பங்களைச் சேர்ந்த 126 பேர் சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் வந்து தஞ்சமடைந்துள்ளனர். இவர்களுக்கு ஒரு வார கால உலர் உணவுப் பொருள்களை வழங்குவதற்கு அவ்வப் பிரிவுக் கிராம அலுவலர்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகச் சண்டிலிப்பாய் பதில் பிரதேசச் செயலரும் உடுவில் பிரதேச செயலருமான ஆ. மகாலிங்கம் தெரிவித்தார்.

மேற்படி பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து, இப் பிரதேச செயலர் பிரிவில் பொது இடங்களிலும் தனியார் வீடுகளிலும் தஞ்சமடைந்த குடும்பங்கள் தாங்கள் தங்கியுள்ள பிரிவுக் கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு பதிவுகளைச் செய்துகொள்ளவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-135)

## ஜனாதிபதியின் அழைப்பை மகாநாயக்கர்கள் நிராகரிப்பு

கொழும்பு, ஏப்ரல் 13

அரசாங்கம் முன்வைத்துள்ள அரசியல் தீர்வு யோசனைகள் மற்றும் தற்போதைய நிலைமைகள் குறித்துப் பேச்சு நடத்துவதற்காக நான்கு பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்களுக்கும் ஜனாதிபதி விடுத்த அழைப்பை அவர்கள் நிராகரித்துள்ளனர். அரசுடன் பேசும் விடயங்கள் எவை என்பது குறித்து முடிவு செய்ய தமக்கு கால அவகாசம் போதாது என்று கூறியே இந்தச் சந்திப்புக்கு மகாநாயக்கர்கள் மறுப்புத் தெரிவித்தனர்.

பொதுவாக நாட்டின் ஜனாதிபதியே மகாநாயக்கர்களை அவர்களது இடத்துக்குச் சென்று சந்திப்பது வழமை. ஆனால் பாதுகாப்புக் காரணங்களைக் கருத்தில் கொண்டு இந்தத் தடவை அலரிமாளிகைக்கு வருமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார்.

எனினும் மகாநாயக்கர்கள் ஜனாதிபதியின் அழைப்பை நிராகரித்துள்ளனர்.

(இ - 6 - 4).

## குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்கல் சீராக இடம்பெறவில்லை

### மக்கள் கவலை தெரிவிப்பு

அரியாலை, ஏப்ரல் 13

ஈச்சமோட்டை, கொழும்புத்துறை மேற்கு சுவாமியார் வீதி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்கப்படுவதை அடுத்து இதுவரை காலமும் தாங்கி மூலம் வழங்கப்பட்டு வந்த குடிதண்ணீர்ச் சேவை தற்போது இப்பகுதியில் நிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை —

குழாய் மூலம் வழங்கப்பட்டு வரும் குடிதண்ணீர்ச் சேவை சீராக இடம்பெறாமையால் குடிதண்ணீரைப் பெறுவதற்கு மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் —

தாங்கி மூலம் குடிதண்ணீரை வழங்கினால் குடிதண்ணீரை மக்கள் போதியளவு சிரமமின்றிப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் மக்கள் தெரிவித்தனர்.

(க—17)

## புது வருட நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13

வடமராட்சி கல்வி வலயம் ஏற்பாடு செய்துள்ள புது வருட நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புலோலி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்தில் வடமராட்சிக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராஜா தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ பீடாதிபதி நடராஜ சுந்தரம் கலந்து கொள்வார்.

(உ-க-118-173)

## வீரர்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13

தேசிய அணியின் தெரிவுக்கான போட்டிகளில் பங்குபற்றுவதற்கான 15 வயதுக்கு உட்பட்ட யாழ் மாவட்ட அணி தெரிவுசெய்யப்படவுள்ளது.

இதற்காக கடந்த வருடம் பாடசாலைகளின் 15 வயதுக்கு உட்பட்ட அணிகளில் இருந்து தெரிவாகி மட்டக்களப்பு சென்றவர்களில் இவ் வருடமும் 15 வயதுக்குக் கீழான வயதெல்லையை உடைய வீரர்கள் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் கல்லூரி அதிபரும் பாடசாலை கிரிக்கெட் சங்கத் தலைவருமான க. இராசதுரையைச் சந்திக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-4)

## பொன் விழா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13

யாழ். நாவாந்துறை சென். நீக்கிலஸ் சனசமூக நிலையத்தின் ஐம்பதாவது ஆண்டுப் பொன் விழாவும் கட்டடத் திறப்பு விழா மற்றும் மலர் வெளியீடும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நாவாந்துறை முன்னாள் பங்குத் தந்தை அருள் திரு. பீ. எம். இம்மானுவேல் கலந்து கொள்வார். (உ-9)

## கைதானவர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13

யாழ். பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ பீட மாணவனான சிதம்பரப்பிள்ளை காந்தன் என்பவர் நேற்று முன்தினம் பிற்பகல் 4.30 மணியளவில் அராலிப் பாலத்தடியில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

இந்தக் கைது தொடர்பாக அவரது உறவினர்கள் வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் என். திரிலோகநாதனுடன் தொடர்பு கொண்டனர்.

513 ஆவது படையணி அதிகாரியுடன் இது தொடர்பாகத் தாம் பேசியதாகவும்—

அதைத் தொடர்ந்து அந்த மாணவன் விடுவிக்கப்பட்டதாகவும்—

திரிலோகநாதன் தெரிவித்தார். (ஐ-3)

## கப்பலில் தபால்கள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13

செல்வாய்யன் றுகாங்கேசன் துறைக்கு வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 95 தபாற்பொதிகள் எடுத்து வரப்பட்டன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 49 தபாற் பொதிகள் அனுப்பி வைக்கப் பட்டதாகத் தபாற் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை நேற்று முன்தினம் 'லங்கா முடித்த' கப்பலிலும் ஆயிரத்து 235 தபாற் பொதிகள் எடுத்து வரப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## இரதோற்சவம்

யாழ்ப்பாணம் ஏப்ரல் 13

வண்ணார்பண்ணை கலட்டி ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தில் இரதோற்சவம் இன்று காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது

நாளை காலை 9.30 மணிக்கு தீர்த்தஉற்சவம் நடைபெறும்.

(3)

## கட்டுரைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13

'உதயன்' அனுசரணையுடன் நடத்தப்பட்ட சதாவதானி கதிரைவேற்பிள்ளை நினைவு தினக் கட்டுரைப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

வெற்றிபெற்ற முதல் மூன்று பேரின் விவரங்கள் வருமாறு:-

முதலாம் இடம் — செல்வி சாரங்கா சதாசிவமூர்த்தி (சங்கத்தானை, சாவகச்சேரி),

இரண்டாம் இடம் — செல்வி சிவகௌரி நாகமுத்து (புதிய செம்மணி வீதி, நல்லூர்),

மூன்றாம் இடம் — வேலும் மயிலும் நந்தகுமார் (புலோலி மேற்கு)

இவர்களுக்கான பரிசில்கள் சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தால் நடத்தப்படவுள்ள விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளன. (க)

## வீடுகளைப் பார்வையிட அனுமதி

தென்மராட்சி, ஏப்ரல் 13

பளைப் பிரதேசத்திலிருந்து வெளியேறிய மக்கள் தமது வீடுகளைப் பார்வையிட படையினர் அனுமதி வழங்கியதையடுத்து கடந்த ஞாயிறன்று கிளாலி ஊடாக புலோப்பளை, அல்லிப்பளை, பெரியபளை, முகமாலை ஆகிய இடங்களுக்கு மக்கள் சென்றனர்.

புலோப்பளை, அல்லிப்பளை ஆகிய பகுதிகளில் சுமார் 70 குடும்பங்கள் தமது வீடுகளில் தங்கியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

செல்வபுரம், கச்சார்வெளி, இந்தாவில் பகுதி மக்களை உள்ளே செல்ல படையினர் அனுமதிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-17)

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தையா சவுந்தரம்

(நயினாதீவு)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா சவுந்தரம் அவர்கள் நேற்று (12-04-2000) புதன் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கதிரேசு கந்தையா அவர்களின் அன்பு மனைவியும் அன்னசோதி (கனடா), செல்வராணி (ஓய்வுபெற்ற விரிவுரையாளர், தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை) செல்வராஜா (கனடா - ஓய்வுபெற்ற ஆய்வு உத்தியோகத்தர், தேசிய வீடமைப்பு அமைச்சு), செல்வமலர், சிவமணி (கனடா), கதிர்காமலிங்கம் (மாவட்ட நீதி மன்றம், திருகோணமலை), உலகநாயகி (லண்டன் - எழுதுவினைஞர் விவசாயத் திணைக்களம்), புண்ணியலிங்கம் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), நவரட்ணராஜா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சோமசுந்தரம் (கனடா, ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற சந்திரசேகரம் (பிராந்திய முகாமையாளர், வட - கிழக்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனம்), செல்வரத்தினம் (உதவிக் கல்விப் பணிப்பாளர், தீவக வலயம், வேலணை), மகேந்திரராஜா (கனடா - தொழில்நுட்ப உத்தியோகத்தர் பெருந்தெருக்கள் திணைக்களம்), சந்திரபாலன் (கணக்காளர், லண்டன்), லங்காதேவி (கனடா), மாலினி (ஆசிரியர், விவேகானந்தாக் கல்லூரி, கொட்டாஞ்சேனை), குணேந்திரா (படவரைஞர், ஆஸ்திரேலியா), பாமா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் (ஓய்வு பெற்ற மருத்துவமாது), சீதேவிப்பிள்ளை, ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கந்தவனம், நாகமுத்து, சிவகாமிப்பிள்ளை, சின்னம்மா, முத்தம்மா, கமலாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 246/10, அழுத்மாவத்தை றோட், கொழும்பில் 15-04-2000 சனிக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சி. செல்வரெத்தினம் (மருமகன்)
(உதவிக் கல்விப் பணிப்பாளர் — தீவகம்)

26, முள்ளி வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம். (75389)

## ஹர்த்தாலால்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டன.தனியார் பஸ் சேவைகளும் இடம்பெறவில்லை.

சாவகச்சேரி, திருநெல்வேலி, கோப்பாய், இருபாலை, மருதனார் மடம் பகுதிகளில் காலையில் வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டிருந்த போதும் -

சீருடையினரின் பணிப்புரையை அடுத்து அந்தந்தப் பகுதிக் கடைகள் திறக்கப்பட்டன. படையினரும் காவல் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

பருத்தித்துறைப் பஸ் டிப்போவுக்கு முன்பாக யாழ். பல்கலைக்கழகத்தின் வடமராட்சி மாணவ, மாணவிகள் மறியல் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர். காலை 5-30 மணிக்கு ஆரம்பமான இந்தப் போராட்டம் மாலை 2 மணிவரை இடம்பெற்றது.பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை ஏற்றிச் செல்ல வந்த லொறிகள் இந்த மறியல் காரணமாக அங்கிருந்து அகன்று சென்றன.

அதே சமயம் -

ஹர்த்தாலுக்கு ஆதரவாக வர்த்தக நிலையங்களைத் திறப்பதைத் தவிர்க்கக் கோரும் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தமிழ்க் குழு ஒன்றின் உறுப்பினர்களுக்கும் இடையில் யாழ். ஆஸ்பத்திரி வீதிக்கு முன்பாகவும் வேம்படி வீதிப் பகுதியில் வாய்த்தர்க்கங்கள் இடம்பெற்றன. (உ-3-5)

## பல்கலைக்கழக......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் அகிம்சை வழியிலான போராட்டங்களின் இறுதி வடிவமாக - மனிதநேய அமைப்புக்களின் ஏற்பாட்டில் - யாழ்.குடாநாடு தழுவிய வகையில் நடத்தப்பட்ட இந்த ஹர்த்தால் தமிழ் பேசும் மக்களினால் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது; இது அவர்களது உள்ளக் கிடக்கையை வெளிக்காட்டி நிற்கிறது. மாணவர் சக்தி மாபெரும் சக்தி என்பதையும் இந்த எதிர்ப்புப் போராட்டம் வெளிப்படுத்தியுள்ளது.

மாணவர்களினால் எந்தவித அடக்குமுறையையும் உடைத்தெறிய முடியும் என்பதற்கும் இந்த ஹர்த்தாலின் வெற்றி ஓர் உதாரணம்.

அகிம்சைரீதியான இந்த எதிர்ப்பு நிகழ்வில் உணர்வுபூர்வமாக ஈடுபட்ட எமது மாணவரில் சிலரைக் கைது செய்து தாக்கிய செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

மாணவர்களின் உணர்வுகளை வன்முறை மூலம் சிதறடிப்பது பெரும் பின்விளைவுகளை ஏற்படுத்தும்.

இது தவிர, எமது மாணவர்களைத் தமிழ்க் குழு ஒன்று தாக்க முற்பட்டதையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

மாணவர்கள் குறித்து ஆபாச வார்த்தைகளைப் பிரயோகித்து எமது அகிம்சை ரீதியான போராட்டத்தை மிகவும் கீழ்த் தரமாகக் கொச்சைப்படுத்திய செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இவ்வாறான செயல்கள் மனிதாபிமானத்தையும் நீதியையும் வேண்டி நிற்கும் சகலரையும் விசனம் கொள்ள வைத்துள்ளது.

இந்த ஹர்த்தாலுக்கு சகல வழிகளிலும் ஒத்துழைத்த யாழ்.மாவட்ட வணிகர் கழகம், வடமராட்சி வணிகர் கழகம், கொடிகாமம் வணிகர் கழகம், வடமராந்தியப் போக்குவரத்துச்சபை நிர்வாகிகள் மற்றும் ஊழியர்கள், தனியார் சிற்றூர்திச் சங்கம், ஓட்டோ ஊர்திகள் சங்கம், யாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்கம் ஆகிய அனைத்துத் தரப்பினருக்கும் எமது நன்றிகள்.

தமிழ் மக்களின் அவல நிலை கருதி, தமது புதுவருட வியாபாரத்தை விடுத்து ஒத்துழைத்த வணிகர்களுக்கு விசேட நன்றிகள்.

இந்தப் போராட்டம் முழு வீச்சுடன் நடக்க முன்னின்று உழைத்த யாழ். பல்கலைக்கழக மாணவர் சமூகத்துக்கும் -

எமது மாணவர்களின் உலர் உணவு சேகரிப்புக்கு பணமாகவும் உணவுப்பொருள்களாவும் மனநிறைவுடன் அள்ளி வழங்கிய எமது மக்களுக்கு வர்த்தகப் பெருமக்களுக்கும் -எமது மனமார்ந்த நன்றிகள்- என உள்ளது.(உ-3)

## இடம்பெயர்வு

எழுதுமட்டுவாழுக்குச் சமீபமாக உள்ள மிருசுவில் பகுதியில் நேற்று முன்தினம் காலை ஷெல்கள் வீழ்ந்ததையடுத்து அப்பகுதி மக்கள் இடம்பெயர ஆரம்பித்துள்ளனர்.

## நேற்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தைச் சுற்றியுள்ள வீதிகளில் பொலீஸாரும், படையினரும் தீவிர ரோந்து சுற்றும் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

அதே சமயம் -

போராட்டத்தில் ஈடுபட்டிருந்தோரைச் சில இராணுவச் சிப்பாய்கள் வீடியோப் படம் பிடிக்க முற்பட்டனர். எனினும் பல்கலைக்கழக மாணவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து இராணுவத்தினர் அங்கிருந்த அகன்று சென்றனர்.

போராட்டத்தின் இறுதியில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பிரதித் தலைவர் எஸ்.கோபால் தலைமையில் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.பின்னர் பிற்பகல் மூன்று மணியளவில் குளிர்பானம் மற்றும் 'பிஸ்கெட்டுக்கள்' வழங்கி உண்ணாவிரதம் முடித்து வைக்கப்பட்டது.

## மூவர் காயம்

கல்முனைக்குடி கிராமத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கிராமசேவகர் ஒருவர் உட்பட முஸ்லீம்கள் மூவர் படுகாயமடைந்தனர்.

## திருமலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் குண்டு வெடிப்பில் 6க்கும் அதிகமானவர்களே காயமடைந்தனர் என்றும் -

எஞ்சியோர் நெரிசலில் சிக்கியும், கண்ணாடி வெட்டியும் காயமடைந்துள்ளனர் என்றும் - கூறப்பட்டது.

கிரனேட் ஒன்றே வெடித்துள்ளதாக ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகப் பொலீஸார் கூறினர். வர்த்தகப் போட்டியே குண்டுவெடிப்புக்குக் காரணமாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. (உ-3-150-140)


## புத்தாண்டு வாழ்த்துக்கள்

மலர்ந்துள்ள புத்தாண்டில் சாந்தியும் சமாதானமும் நிலவ அனை வரினதும் ஒத்துழைப்பு இன்றியமையாதது.

இரண்டாயிரமாம் ஆண்டு முற்பகுதியில் எமது மக்கள் சமாதானத்தை ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கின்றனர். இந்த வேளையில் அண்மையில் இடம்பெற்றுவரும் யுத்தத்தால் காயமடைந்தும் உயி ரிழந்தும் உள்ள மக்களுக்காக இன்றைய புத்தாண்டு நாளில் பிரார்த்திப்போமாக!

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வுடன் பரஸ்பரம் விட்டுக்கொடுத்த! இந்த யுத்தத்தைத் தவிர்த்து உறுதியான சமாதானப் பேச்சுக்கு முன்வர வேண்டும்.

அகிம்சை ரீதியான போராட்டங்களிலும் கூட மக்களின் அன்றாட வாழ்க்கை நிலை பாதிப்புறாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

சமாதான முயற்சிகளுக்கு என்றென்றும் பக்கபலமாகவும் உறுதுணையாகவும் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி செயற்படும் என இந்தப் புத்தாண்டு தினத்தில் உறுதி கூறுகின்றோம்.

**ந. திரிலோகநாதன்**
(வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவரும், (ஈ.பி.டி.பி)அமைப்பின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளரும்)

## மக்கள் வங்கி

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்வதுடன்,
புத்தாண்டுக் கொடுக்கல்வாங்கல்கள் 14-04-2000
வெள்ளிக்கிழமையன்று
காலை 9.00 மணிக்கும் 11.00 மணிக்கும் இடையில்
நடைபெறும் என்பதையும் அன்றையதினம் பணம்
வைப்பிலிடுபவர்களுக்கு பத்து ரூபா நாணயம்
கைவிசேடமாக வழங்கப்படும் என்பதையும்
அறியத்தருகின்றோம்.

### அறிவித்தல்

*யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை வாடிக்கையாளர்களின் கவனத்துக்கு!*

யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையில் இன்று 13.04.2000 வியாழக்கிழமை நடைபெறவிருந்த சேமிப்புக்கணக்கு அதிர்ஷ்டசாலிகளுக்கான பரிசு வழங்கும் வைபவம் பிற்போடப்பட்டுள்ளது பரிசு வழங்கலுக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(C/11820) *பிரதேச முகாமையாளர்.*

## ஸ்ரீ விநாயகர்
## வீடியோ & ஓடியோ றெக்கோடிங் சென்ரர்

அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!
இன்றைய வீடியோ CD வெளியீடுகள்

* STEALTH FIGHTER
* FIST OF LEGEND
* BLACK CAT RUN
* OUT IN FIFTY
* BLACK OUT EFFECT
INVASION
* BRAVO
* WHO DARES WINS
* THE LOST WORLD
* GLADIATOR COP
* COMMANDO

சீனறிக் காட்சிகள் (வீடியோ மிக்ஸிங்)
ஓடியோ CD வெளியீடுகள்
* புதிய ஆங்கிலப் பாடல்கள்

T.P :021- 2949 (75355) *பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி.*

*பரீட்சை முடிவுகள் வரும் வரை பொறுத்திருந்த மாணவர்களுக்கான*

## புதிய பிரிவுகள் ஆரம்பம்!

A/L 2002
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
15.04.2000 காலை 8.30மணி (புதிய நேரம்)

*கணக்கீடு* – D.SAM
*பொருளியல் – இராஜேஸ்வரன்*
*தமிழ் – மீரா*
*இந்து சமயம் – சுரேன்*
*புவியியல் – இக்னேசியஸ்*
*நாடகம் – சந்திரன்*
*வணிகக் கல்வி – பசில்*
*அளவையியல் – மோகன்*
*இ. நாகரிகம் – ஜோதீஸ்வரன்*
*கிறிஸ்தவம் – மல்லிகா*
*அரசியல் – லிகோறி*
*ஆங்கிலம் – சுந்தர்ராஜன்*
*சிங்களம் – சூரி*
*வணிகப் புள்ளிவிவரவியல்* C.G.P } *– தவசேகர்*

## D.M.I
யாழ்நகர்.
(C/11816)

**ஷண்ணின்
நேற்றைய ஓடியோ
CD வெளியீடு**

*விஜய் நடிப்பில்*
**குஷி**
இதற்கு முன் வந்த
A.R. ரகுமானின் இசையில்
வெளியான படங்கள் உட்பட
சகல ஓடியோ ஊனு களும்
விற்பனைக்குண்டு.
**ஷண்**
பெரியகடை
யாழ்ப்பாணம். (75384)

## தேவை

எமது தலைமைஅலுவலகத்தில் இயங்கிவரும் கணனி உதிரிப்பாக விற்பனை நிலையத்துக்கு பெண் லிகிதர் தேவை.

விண்ணப்பதாரி ஓரளவு கணனி சம்பந்தமான அறிவுடையவராக இருத்தல்வேண்டும். விண்ணப்பிக்க விரும்புவோர் நாளை (14-04-2K) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சுய விவரங்களுடன் நேரில் வரவும்.

*இயக்குநர்*
IIS.
*100, மணிக்கூட்டு வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(C/11812)

**2002 பிரத்தியேக
வகுப்புகள்**

இணைந்த கணிதம்
செவ், வியா - 6.00 a.m
*திரு. அம்பி* (BS.c)

பௌதிகவியல்
சனி, ஞாயிறு : 6.00 a.m
*திரு. கருணாநிதி* (BS.c)

இரசாயனவியல்
திங்கள், புதன்: 6.30 a.m
*திரு. அன்பு*

புதிய பிரிவு : 18-04-2K
காலை 6 மணிக்கு ஆரம்பம்

*சயன்ஸ் அக்கடமி*
நல்லூர். (75354)

*அனைவருக்கும் எமது புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்!*

*கேட்டு வாங்குங்கள்!*

**சூரியா நீல சோப்
சூரியா மினி சோப்**

100 சூரியா நீல சோப் மேலுறைகளுக்கு
ஓர் அப்பியாசக் கொப்பி இனாம்!

*SURIYA PRODUCTS*
*527, K.K.S.ROAD*
*JAFFNA.*
(75360)

புத்தாண்டு வாழ்த்துக்களுடன்
A/L 2002
கலை வர்த்தகம்
கணிதம் விஞ்ஞானம்

**2 ஆவது புதிய பிரிவு
ஏப்ரல் 15 இல் ஆரம்பமாகிறது**

ஏப்ரல் 30 வரை மட்டுமே அனுமதிகள் வழங்கப்படும்.
(75361) *- அதிபர் -*


## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் பீதாம்பரசிங்கம்

கைதடி நுணாவிலைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் பீதாம்பரசிங்கம் அவர்கள் 11-04-2000 செவ்வாய்க்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காசிநாதன்,பொன்னம்பலம்-சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும்,இந்திராணியின் பாசமிகு கணவரும் ,தங்கச்சி யம்மாவின் அன்பு மருமகனும்,கனகலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலம்சென்ற தளையசிங்கம்,தங்கரத்தினம் (கனடா), செல்வரத்தினம் ஆகியோரின் அன்புச்சகோதரனும்,,பாமா(கனடா), உமா (கனடா),சியாமா (கனடா),குமுதா(கனடா) ,சுதன்(கனடா) ஆகியோரின் அன்புமிகு தந்தையாரும், சகில்ராஜ்(கனடா),சதா(கனடா),சசி(கனடா),கிருந்தன் (கனடா) ஆகியோரின் பட்சமிகு மாமனாரும்,மகேஸ்வரி(ஓய்வுபெற்ற ஆசிரியை), நாகேஸ்வரி-சோதிலிங்கம்(ஜேர்மனி),பொன்னுத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனரும், நித்தியகுமார் (பிரான்ஸ்), நித்தியரஞ்சன் (பிரான்ஸ்), நித்தியபாபு (ஜேர்மனி) நித்தியராகவன்(கனடா), தர்மதாசன் (கொழும்பு), யோகதாசன்,காலஞ்சென்ற சிவமலர் மற்றும் சிவச்செல்வி,சின்னராசா, சுகிந்தன்(ஜேர்மனி),மகிந்தன் (கனடா), அகிலன் (ஜேர்மனி),பகீரதன் (கனடா),ராதிகா (கனடா), நகுலநாதன், பவானி,நந்தினி,குகதாசன், நிலாசினி (பிரான்ஸ்)ஆகியோரின் அன்புமிகு பெரிய தந்தையும், சிற்றி, தமயந்தி, றெபேக்கா, டிலோஜ்ஜன், ஐசிலி, ரிஜோஜ் ஆகியோரின் பாசமிகு பேரனு மாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 15-04-2000 சனிக்கிழமை கனடாவிலுள்ள ரொறன்டோ நகரில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி, நுணாவில்,
சாவகச்சேரி.
(C/11827)
தகவல்:
த.கனகலிங்கம்
(சகோதரன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13-04-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# உதயன் ~ புத்தாண்டுச் சிறப்பிதழ்

## நல்லை ஆதீன முதல்வரின் ஆசி

புத்தாண்டு புதிய நம்பிக்கையைத் தரும் ஆண்டாக அமைய இறைவனைப்பிரார்த்திப்போம். எமது மக்களைச் சூழ்ந்துள்ள இருள் நீங்க இறைவன் அருளே தோன்றாத் துணையாக விளங்கும். இறையுணர்வு ஒன்றே எங்களுக்கு மீட்சி தரும்.

மனித நேயத்தை அடிப்படையாகக் கொண்டு இன்றுமுதல் நல்ல வார்த்தைபேசி, இன்முகங்காட்டி, சிடுசிடுப்பை விடுத்து பெரியோரை மதிக்கப் பழகுவோமாக. பிறர் மனம் நோகாமல், புண்படும்படியாகப் பேசாமல் போகவிட்டுப் புறங்கூறாமல் வாழப்பழக வேண்டும்.

புத்தாண்டு சமாதானத்தையும் சுபீட்சத்தையும் சர்வ மங்களத்தையும் எல்லோருக்கும்வழங்க வேண்டும் என்று எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்தித்து நல்லைக்குருமணியின் பாத கமலங்களைப் பணிந்து ஆசி கூறுகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்**
*நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்*



## சிவத்தமிழ்ச் செல்வி வாழ்த்துரை

புதுவருடப் பிறப்பு என்றால் சிந்தனையிலும் செயலிலும் புதுமைகாண எடுக்கப்படும் சிறந்த சமய விழாவாகும். இந்த நாளில் இறைவழிபாட்டுடன் சூரியபகவானுக்கு, பொங்கல் செய்து அனைவருக்கும் வழங்கி மகிழ்வது இன்றியமையாதது. பெரியவர்கள் கையினால் பணம் பெற்றும் வாழ்த்துப் பெற்றும் ஆசிபெறுவதும் முக்கிய நிகழ்வாகும். இவற்றை வெறுஞ்சடங்காக மட்டும் மேற்கொள்ளாது, உள்ளத்திலும் புதுமை உணர்வை ஏற்படுத்தப் பயின்று கொள்ள வேண்டும்.

"ஆழ்க தீயது எல்லாம்"
"அரன் நாமமே சூழ்க"
என்று பாடிப் பணிந்து பரவி நிற்போமாக.

*சிவத்தமிழ்ச்செல்வி*
*கலாநிதி* தங்கம்மா அப்பாக்குட்டி

## இறைவனைப் பிரார்த்திப்போம்

தமிழ்ப்புத்தாண்டைக் கொண்டாட முடியாத நிலையில் எமது சகோதரர்கள் பலர், எமக்கு அருகிலேயே இருந்து அவலப்படுகிறார்கள். இருப்பினும் நாம் பல ஆண்டுகளாக துயர்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே துன்பங்கள் நமக்கு புதியன அல்ல. எம்மைச் சூழ்ந்துள்ள இருள் நீங்க அருள் புரிய வேண்டும் என்று இறைவனிடம் மனதார பிரார்த்திப்போம். விடிவுகாலம் தூரத்தில் இல்லை.

**சுவாமி சித்ருபானந்தா**
*ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம*
*பருத்தித்துறை.*

### விக்கிரம நல்லாண்டே!

விக்கிரம நல்லாண்டில் மேதினியெல்லாம் செழித்து
மிக்கபொருளாதாரம் மேலோங்கி - மக்களெல்லாம்
அன்பு சமாதானம் ஆய்வறிவு செல்வமுடன்
இன்பமிக வாழ்க இனிது.

அருட்கவி. சீ.விநாசித்தம்பி.

### சித்திரை மகளே வருக வருக!

சித்திரை மகளே வருக வருக...!
சிறப்புகள் அனைத்தும் தருக தருக...!
இத்தரை ஒளிர வருக வருக...!
இகமதில் இன்பம் தருக தருக...!
அவலங்கள் அகல வருக வருக...!
அன்பொடு பண்பும் தருக தருக...!
சபலங்கள் நீங்க வருக வருக...!
சாந்தியை நெஞ்சில் தருக தருக...!

- கலைநேசன் சீவம் -

## பூமி இளமையாக இருக்க சூரிய பகவானைத் துதிப்போம்

கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என யுகாதிகள் தோன்றி அவ்யுகாதிகளின் ஆர்கணாக சம்வத்ஸரம் எனும் வருஷங்களும் தோன்றின. அந்த வகையில் இப்போ கலியுகம் 5102 இல் அறுபது வருட சுற்றுவட்டத்தின் 14 ஆவது வருஷமாக "விக்கிரம்" என்ற நாமத்தோடு இவ்வருஷம் உதிக்கிறது.

சகல உலகிற்கும் ஒளிதரும் ஞாயிறும், திங்களும், ஏனைய கோள்களும்தான் வருஷப் பிறப்பை நிர்ணயிக்கின்றன. கோடைப்பருவத்தில் சூரியன் படைப்பவனென்றும், கூதிர் பருவத்தில் காப்பவனென்றும், மாரிகாலத்தில் அழிப்பவனென்றும் கருதப்படுகிறது.

கதிரொளி வீசும் சூரியனை (பகலவன்) ஆண் என்றும் அக்கதிர்களை ஏற்கும் நிலம் பெண் என்றும் (நிலமகள்) சான்றோர் இயல்பாக வகுத்தனர். எனவே சிவனும் அம்மையும் ஒன்றாகி அர்த்தநாரீஸ்வரராக அருள்பாலிப்பது போன்று, சூரியனும், நிலமும் ஒன்று சேர்ந்து சிவசூரியனாகி இந்த ஞாலத்தை இரட்சித்து அருளுகிறார் என இருடிகள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றனர். மேலும் சூரியனும் சூரியனின் கதிர்களால் ஒளிதரும் சந்திரனும் ஒன்றாகி இப்பூமிக்கு பகல், இரவு என்று இருநிலைப் பேறுகளால் அருள்செய்கின்றனர் என்றும் கார்க்கி முனிவர் அறியத்தந்துள்ளார். சூரிய சந்திரர்களது ஆற்றல்களைக் கண்டு பிடித்தவர்கள் சைவர்களேயாம்.

மகாராஜஸ்ரீ
**சு.து. ஷண்முகநாதக் குருக்கள்**
மாவை ஆதீனகர்த்தா.

நாள்கள் செல்லச் செல்ல மனிதனது உடலும் மாற்று ஏற்றங்களால் மாறுபடுவது போன்று பூமியும் வருஷங்கள் செல்லச் செல்ல மாற்றங்களை எதிர்நோக்குவதைச் சோதிட கணித நூற் தரவுகள் தருகின்றன.

பூமி எப்போதும் யௌவனமாக, இளமையாக, அழகாக விளங்க வேண்டுமாயின் மாதப்பிறப்பு, வருஷப் பிறப்பு போன்ற காலங்களில் மக்கள், சூரியனாருக்கு பொங்கல் பூசைகளை நடத்தி, படையல்களால் நிவேதித்தும், சங்கிராந்தி தீர்த்தங்கள் ஆடி தான தர்ப்பண தர்மங்களை இயற்ற வேண்டும். அத்தோடு சூரிய பகவானிடத்தே விஸ்வாமித்திர ரிஷி பெற்ற காயத்திரி மந்திரங்களை ஜெபித்தும், ஆலயங்களில், வீடுகளில் மற்றும் தொழில் ஸ்தாபனங்கள் சமுத்திர நதி தீர்த்தக் கரையோரங்களிலும் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் நெய்த் தீபங்களேற்றியும் சூர்ய பகவானை மகிழ்விக்க வேண்டும் - என்று ஞான நூல்கள் எமக்கு தரவுகள் தருகின்றன.

சித்திரை முதலாம் நாள் (13.04.2000) வியாழக்கிழமை விக்கிரம வருடம் உதயமாகிறது. உண்மைச் சைவர்கள் அனைவரும் மேற்கூறியவாறு தமக்குரிய சைவக் கருமங்களை சிரத்தையோடு ஆற்றி சிவ சூர்ய தேவனது அருளுக்கு ஆளாகுமாறு இத்தால் ஆசீர்வதிக்கின்றேன்.

## புத்தாண்டை அகமகிழ்ந்து எதிர்கொள்ள இயலாது இடர்ப்படும் நிலையில் தமிழர்

புத்தாயிரமாம் ஆண்டு தொடங்கி உலகெலாம் புதுமைகள் நிறைந்து, அமைதி பொலிந்து, மக்கள் அக மிக மகிழக் காத்திருக்கும் இவ்வேளையில் விக்கிரம வருஷம் பிறப்பது இவ்வாண்டின் மகத்துவத்தை உயர்த்தி நிற்கின்றது.

புத்தாயிரம் என்னும் இப்புது யுகத்தில் சித்திரை மாதம் முதலாம் திகதியாம் இன்று வியாழக்கிழமை பிற்பகலில் 3 மணி 15 நிமிட அளவில், சிங்க இலக்கினத்தில், சித்தாமிர்த யோகத்திலும், சூரிய ஓரையிலும் ஆயிலியம் 2 ஆம் பாத நட்சத்திரத்தில், இப்புதிய விக்கிரம வருடம் பிறக்கின்றது என சோதிட வல்லுனர் கணித்துக் கூறுகின்றனர். வாக்கிய திருக்கணித சோதிட ஆய்வுகளில், நேரகாலத்தில் சற்றே வேற்றுமை இருப்பினும் இன்று வியாழன் மாலையில் புதுவருடம் பிறக்கின்றது என்பதில் வேற்றுமை கிடையாதெனலாம். நம் ஆன்றோர் புதுவருடப் பிறப்பை எப்படியெல்லாம் கொண்டாடினர் என ஒரு கணம் எண்ணிப் பார்க்கின் புது வருடப்பிறப்பன்று உற்றாரும் உறவினரும் கூடி இருந்து ஒருவர் பஞ்சாங்கத்தில் வருடப் பலனை படிக்க, அனைவரும் அந்த ஆண்டின் பலனைக் கேட்டு வியந்து நிற்பர். போரின் கொடுமையும், உயிர்ப் பலியும், அகதி வாழ்வும், பஞ்சமும் பிணியும், கண்டு கேட்டறியாத அக்காலத்தில், மழை வீழ்ச்சியும் தானிய விருத்தியும், இயற்கை அழிவும், எப்படி எல்லாம் எம்மை எதிர்கொள்ளப் போகின்றன என்பதே மக்கள் முன் உள்ள ஒரே கேள்வியாக இருக்கும்.

புலவர்
**மு.திருநாவுக்கரசு**
(முன்னாள் மாவட்ட நீதிபதி)

புத்தாண்டில் தம் வாழ்வும் வளமும் சீரும் சிறப்பும், பொலிவுற வேண்டில், தாம் அதற்கான விதிமுறைகளை முறையாகக் கையாளத் தவறக் கூடாது என எண்ணிய நம் முன்னோர், மிக பக்தி சிரத்தையோடு தெய்வத்தையே முன் நிறுத்தி தெய்வீக மணம் கமழ புத்தாண்டுப் பிறப்பினை பொலிவுற கொண்டாடினர். அதிகாலை எழுந்து மருத்து நீர் பெற்று நீராடி தெய்வத் திருத்தலங்களில் பக்தி சிரத்தையோடு பணிந்து, இறை அருளை வேண்டி, "எல்லாம் அவன் செயல்" என முதல் வணக்கம் செய்தனர் நம் ஆன்றோர். அதன் பின் பஞ்சாங்கமே அவர்களை மேற்கொண்டும் வழி நடத்தி நின்றது. கை விஷேசம், நாட்கணக்கு முதலாக, வீடுவேய்தல், உழவு செய்தல், பயிர் நடுதல், புதிர் எடுத்தல் இப்படியாக அன்றைய தமிழ் மகனும் உடன் வாழ்ந்த தமிழ் மகளும், புத்தாண்டு முதலாக, நேரம் காலம், அட்டமி நவமி, அமாவாசை என்று, பஞ்சாங்கம் காட்டிய சுபநேரத்திலேயே தம் வாழ்வை மையமாக வைத்து வாழ்ந்தனர்.

### விக்கிரம ஆண்டே விடிவினைத் தருக!

**பண்பாட்டை மறக்கிறோம்**

மாறிவரும் காலச்சூழ்நிலையில் சிக்குண்டு, நம் தமிழ்மக்களும், மேலை நாட்டு மொழி, நாகரீகம் பண்பாடு கலை கலாசாரம், இவற்றில் விரும்பியோ விரும்பாமலோ சிக்குண்டு, அனைத்துத் தமிழர் தம் பண்பாட்டினையும், விதிமுறைகளையும் முற்றாக மறந்தும், மறுத்தும் மனம் போல வாழ முற்பட்டு நிற்பதால், நம் ஆன்றோர் காத்துக் கை அளித்த பழம் பெரும் பண்பாட்டினை மறந்தவராகி ஓர் மயக்க நிலையில் வாழ முற்பட்டுவிட்டோம்.

மொழி அழிந்து, பண்பாடு குலைந்து, பழக்கவழக்கங்கள் தேய்ந்து மறைந்து, நாமும் எடுப்பார் கைப்பிள்ளையாக, மனம் போன போக்கில் மதி மயங்கி வாழ்ந்து விட முற்பட்டால், வருங்காலச் சந்ததியினர் எம்மை, வரலாற்றை கொன்றழித்த மாபெரும் வடுவினை நம் மீது சுமத்தி நிற்பர். எனவே இப் புத்தாண்டில், தமிழர்கள் குறிப்பாக இந்துக்கள் ஓர் அரணாக நின்று, "கட்டுண்டோம் பொறுத்திருப்போம். காலம் மாறும்" என்ற அசையாத நம்பிக்கையில், மரபு வழி வந்த மகத்தான பண்பாட்டை, தெய்வீக உணர்வை, திருநெறிய சைவத்தின் சீரைச் சிறப்பையெல்லாம் கால வேகம் கட்டவிழ்த்து அடிபட்டு அள்ளுண்டு போகா வண்ணம், காத்து வளர்த்து நம் வருங்காலச் சந்ததிக்கு கை அளிக்கும் பெரும் பொறுப்பை பேணிக்காக்க வேண்டியவர் முதியவரல்லர்; மூத்தவருமல்லர்; நம்நாட்டு இளைஞர்களே!

சழப்போர் ஒரு புறமும், ஈனக் கொலைகள் மறுபுறமும், குண்டுமாரி ஒரு புறமும் அகதி வாழ்வு மறு புறமும் கைதுகள் தொடர காணாமல் போனோர் கவலையுடன் காத்திருக்க வேதனைகள், சோதனைகள் வெவ்வேறு உருவில் உலாவிவர, நம்மில் ஒரு பகுதியினர், தெருவோரம், வீடிழந்து விளைநிலமும் தானிழந்து அகதிகளாய் வாடிநிற்க, நாம் அகமகிழ்ந்து புதுவருடத்தை எதிர்கொள்ள இயலாது இடர்ப்படுகின்றோம்.

இத்தனை அவலங்களும் நீங்கி, உலகு வியக்கும் வண்ணம் நாம் விடிவு பெற்று விமோசனம் காணும் நாள் வெகுதொலைவில் இல்லை என்று பிரார்த்திப்போம். அதுவரைக்கும் நாமமது தமிழரென வாழ்வதற்கு நம் கலையை, பண்பாட்டை, நடைமுறையை, சீரிய பழக்கவழக்கங்களை, எமது தனித்துவமான நாகரீகத்தை கட்டிக் காத்து விடிவிற்குக் காத்திருப்போம். விக்கிரம ஆண்டே விடிவினைத் தருவாயாக!

### எல்லோருக்கும் அருளிடம்மா

புத்தாயிரம் ஆண்டுச்
சித்திரைப் பாவையே!
நிலமதிர்ந்து நிற்கையில்
வாழ வை என்று
மனமுருகிப் பிரார்த்தித்தே
நின்னை வரவேற்பதற்காய்
ஆயத்தங்கள் செய்திட
விக்கிரமப் பெண்ணாய்
வீதிகளில் எழுந்திட்டாய்
என்ன? 'என் வருகையாலே
நாட்டில் சமாதானம்'
என்று சொல்கிறாயா?
நாம் கேட்டு நிற்கும்
வரமே அதுதானம்மா.
ஊர்கள் எங்கும்
நிம்மதிக் காற்று
நித்தமும் வீசியே
சீரோடு வாழ்ந்திட
எல்லோருக்கும்
அருளிடம்மா!

- மீசாலையூர் கமலா -

# உதயன் - சித்திரைப் புத்தாண்டு சிறப்பிதழ்


அனைவருக்கும் இனித்திடும் புத்தாண்டு வாழ்த்துக்கள்

நாயன்மார்கட்டு வைத்தியசாலை

சகலவிதமான முறிவு, நெரிவு, சுழுக்கு, மலட்டுரோகம், ஆண்மைக்குறைவு, குழந்தை வைத்தியம் யாவும் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்படும்.

வைத்திய கலாநிதி: ஏ.உமாகாந்தன்

**Nayanmarkaddu Hospital**
ESTD 1838

**Dr.E.UMAGANTHAN R.I.M.P., D.A.M.**

FRACTERS Soecialist Medicine Superintendent
(13th Hereditary Fracture's Physician's)
**Propritor - trusty - Chief Manager Regd. No. 5745**

Former Visiting Lecturer in Siddha Medicine University of Jaffna, Incharge of Fracture nuite Govt. Ayur. Teaching Hospital Kaithadi Jaffna.

(75321) **Chemmany Road, Nallur East, Jaffna.**



வாடிக்கையாளர்களுக்கு எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

கலர் போட்டோ கிராபிக்ஸ்
அன்
கலர் லாப் செய்திட நீங்கள் நாடவேண்டிய தரமான ஒரே இடம்

**திரு வீடியோ விஷன்**

எம்மால் நடத்தப்பட்ட கலர் புகைப்படப் போட்டியில் பரிசில் பெற்றவர்கள் விவரம்

முதலாம் பரிசில்:
ஏ.விஜயகுமார்,
27/1, 3ஆம் குறுக்குத் தெரு,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

இரண்டாம் பரிசில்:
தி.சிவமாலினி,
பாடசாலை வீதி,
கரணவாய் மத்தி,
கரவெட்டி.

மூன்றாம் பரிசில்:
ஜெ.வதனராஜன்,
கோணான் தோட்டம்,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசும், பங்குபற்றியோருக்கான சான்றிதழ்களும் மிக விரைவில் வழங்க ஏற்பாடு செய்யப்படுகின்றது.

உரிமையாளர்
திரு வீடியோ விஷன்,
மூத்தவிநாயகர் கோயிலடி,
கரணவாய்.

(C/11800)



அன்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்

**போட்டோ ரவி அன் வீடியோ**

நவீன மிக்சிங் முறையில் வீடியோ படப்பிடிப்புக்கும் ஸ்ரில் கலர் படப்பிடிப்புக்கும் நாடவேண்டிய ஒரே இடம்

போட்டோ ரவி அன் வீடியோ

20, யாழ் ரோட்,
யாழ்ப்பாணம்.



கிளை:
57/2, ஸ்ரான்லி பில்டிங்,
ஸ்ரான்லி ரோட்,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:- எமது நிறுவனத்தின் பெயர் தவிர்ந்த ஏனைய பெயருடைய நிறுவனங்களுக்கோ அல்லது தனிப்பட்ட நபர்களுக்கோ எமக்கும் தொடர்பில்லை என்பதையும், மேற்காணும் முகவரியைத் தவிர வேறு முகவரி எமக்கில்லை என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(75236) — நிறுவனத்தினர்



நலம் காணும் நன்னாளாம் இந்நாளில் எங்கள் இதயம் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்!

சுபமுகூர்த்தப் பட்டுச்சேலைகளில் மணமகளுக்கு எழில்மிகு தோற்றமளிப்பது

**சீமாட்டி புடைவையகம்**

122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
**T.P.No: 2196**

(C/11811)



ஆதரவாளர்கள் நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

உங்கள் மேனிக்கு அழகு சேர்க்கும் வகையில் கண்கவர் தங்க நகைகளை அசல் 22 கரட் நிரம்பிய வகையில் நியாயமான முறையில் பெற்றிட யாழ்நகரில் புகழ்பெற்ற ஸ்தாபனம்



**சிறீ ஜெயந்தி நகைமாளிகை**

74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.NO: 2074

(C/11656)



**பூபாலசிங்கம் புத்தகசாலை**

புத்தாயிரம் ஆண்டை வரவேற்று வாடிக்கையாளர்களுக்குத் தனது புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.

- மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள்
- பயிற்சிப் புத்தகங்கள், சகல தினத்தாள், கலண்டர்கள், பஞ்சாங்கக் கலண்டர்கள்
- பஞ்சாங்கம் ஆகியன விற்பனையாகின்றன.

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

இல.4A, ஆஸ்பத்திரி வீதி,
பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம்.

(C/11807)



புத்தாண்டுப் பொன்னாளில் பொன்னகை பூண்டு புன்னகை பூத்திட எந்நாளும் என்றென்றும் தங்கத் தரணியில் தனித்துவமாய் மிளிர்ந்திட இந்நாளே நாடுங்கள்!

**அர்ச்சனா நகையகம்**

118, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இகலோகம் இனிதாகும் இன்பத் திருநாளில்
அன்பர்கள், ஆதரவாளர்கள், அனைவருக்கும்
எங்கள் புத்தாண்டு நல்வாழ்த்தை நல்கி நிற்கும்
அர்ச்சனா நகையகத்தின்
உரிமையாளரும் — ஊழியர்களும்.

(C/11809)

உதயன் - சித்திரைப் புத்தாண்டுச் சிறப்பிதழ்

# உழைப்பதற்கும் உயர்வதற்கும் ஊக்கம் தரும் புத்தாண்டே வருக!

"இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று நீவிர் எண்ண மனதைத் திண்ணமுறச் செய்து கொண்டு தின்று விளையாடி இன்புற்றிருந்து வாழ்வீர்" என்று உயர்வதற்கு ஊக்கம் தருகிறார் மகாகவி சுப்பிரமணிய பாரதியார். பாரதியார் பாடியதுபோல விக்கிரம புத்தாண்டு தின்று விளையாடி இன்புற்றிருந்து வாழ வழி செய்ய வேண்டுமென இறைவனை வேண்டுவோம்.

## பண்டிகைகளும் வாழ்வும்

தமிழர் வாழ்விற் பண்டிகைகள் பல. இவையெல்லாம் ஊக்கத்தையும் உறுதியையும் நம்பிக்கையையும் தருவனவாக உள்ளன. பொங்கல் பண்டிகை உழவருக்குச் சிறப்பாகவும் தமிழர் எல்லோர்க்கும் பொதுவாகவும் உள்ளது. அத்தகைய துன்ப நிலையிலும் பொங்கல் நாள் கொண்டாட்ட நாளாக - திருநாளாக - அமைகிறது. புதுவருடமும் தமிழர் வாழ்வில் துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து இன்பம் சேர்க்கும் பண்டிகையாக வருகிறது. நமது துயரங்கள் நீங்கி; நல்வாழ்வு கிட்டும்; பொருள்வளம் மேலோங்கும்; கல்விச் செல்வம் பெருகும்; மனதில் உறுதி சேரும் என்றெல்லாம் நம்பிக்கை ஊட்டுவது புத்தாண்டு. எனவே புத்தாண்டும் ஏனைய பண்டிகைகளும் தமிழர் வாழ்வில் நம்பிக்கை ஊட்டுவனவாக அமையும்.

## அன்பும் அறனும் அமைந்த இல்வாழ்வு

இல்வாழ்வுக்கு அடிப்படையே அன்பும் அறனும் என்றார் திருவள்ளுவர். புத்தாண்டு தினத்தில் நாம் நண்பர்கள் வீடுகளுக்குச் சென்று நமது அன்பைப் புலப்படுத்தி உண்டு மகிழ்கிறோம். அதேபோல நமது நண்பர்களும் எங்கள் வீடுகளுக்கு வந்து தமது அன்பைப் புலப்படுத்தி உண்டு மகிழ்கிறார்கள். உறவினர்களும் இவ்விதம் நடந்து கொள்கிறார்கள். கைவிசேடம் கொடுப்பது, ஆசீர்வாதம் பெறுவது அனைத்தும் அன்பைப் புலப்படுத்தும் செயல்களே! புத்தாண்டு தினத்தில் கணவன் - மனைவி அன்பு, பெற்றோர் - பிள்ளைகள் அன்பு, நண்பர்கள் - உறவினர் அன்பு என்று அன்பு பல விடத்திலும், பல விதத்திலும் சுடர் விட்டுப் பிரகாசிக்கிறது.

## உழைப்பிலும் உயர்விலும் நம்பிக்கை

மனிதனுடைய உழைப்பிலும் மனிதனுடைய உயர்விலும் பெரும் பகுதி நம்பிக்கையிலேயே தங்கியிருப்பதைக் காண்கின்றோம். புத்தாண்டு தனக்கு உயர்வைத் தரும் என்ற நம்பிக்கையில் நாள் வேலைக்கு உழவன் ஏரை எடுக்கிறான். தனக்கு இந்த வருடம் நல்ல வருமானம் கிட்டும் என்ற நம்பிக்கையில் வணிகன் தனது நாள் வேலையைத் தொடங்குகின்றான். கல்வி கற்பவர்கள் புத்தாண்டுடன் கல்வியில் முன்னேற்றம் கிட்டும் என்ற நம்பிக்கையுடன் நாட் படிப்பைத் தொடங்குகின்றனர். இந்த நம்பிக்கை எல்லாம் நிறைவேற உழைப்பும் வேண்டும்; உறுதியும் வேண்டும். தெய்வ அருளும் வேண்டும். பாரதியார் சக்தியை நோக்கி -

"எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்
பண்ணிய பாவமெல்லாம்
பரிதிமுன் பனியே போல
நண்ணிய நின்முன் இங்கு
நசிந்திடல் வேண்டும் அன்னாய்!"
- என்கிறார்.

வாழ்வில் உயர்வதற்கு இலட்சியமும், நேர்மையும் வேண்டும் என்பதைப் பாரதியார் -

"தேடிச் சோறு நிதந்தின்று -
பல
சின்னஞ்சிறு கதைகள் பேசி-
மனம்
வாடித் துன்பமிக உழன்று -
பிறர்
வாடப்பல செயல்கள் செய்து -
நரை
கூடிக் கிழப்பருவமெய்தி -
கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின்மாயும்-
பல
வேடிக்கை மனிதரைப் போலே-
நான்
வீழ்வேனென்று நினைத்தாயோ?"
- என்ற பாடலிற் கூறி உயர்ந்த வாழ்வுக்கு ஊக்குவிக்கிறார்.

- சந்திரமௌலி -

## தமிழர் தனித்துவம்

பண்டிகைகள் தமிழரின் தனித்துவத்தையும் பண்பாட்டையும் விளக்கமளிக்கவும் உதவுகின்றன. புத்தாண்டில் பல்லாண்டு காலமாக விளையாடப் பெற்றுவரும் தாச்சி விளையாட்டும், போர்த் தேங்காய் அடித்தலும் தமிழருக்கே உரியவை. இன்று தாச்சி விளையாட்டும் போர்த் தேங்காய் அடித்தலும் மிகக் குறைந்து விட்டன. இவையிரண்டும் உடலுக்கு உறுதி தருவதோடு பார்ப்போருக்கும் பெரு மகிழ்ச்சி தருவன என்பதை மறந்துவிட முடியாது.

## மாநிலம் பயன்பெற வாழ்தல்

"வல்லமை தாராயோ - இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே!" என்கிறார் பாரதியார். "உண்டால் அம்ம இவ்வுலகம்தமக்கென முயலா தோற்றாள் பிறர்க்கென முயலுநர் உண்மையானே"என்கிறது புறநானூறு. எனவே இந்தப் புத்தாண்டில் நாம பிறர்க்குப் பயன்படும் தர்மம் எதையாவது செய்யவேண்டும். அது தான் திருவள்ளுவர் கூறும் அறமும் ஆகும். புத்தாண்டுக் கொண்டாட்டத்துக்கெனப் பெருந்தொகையைச் செலவிடும்போது ஆதரவற்றோர் இல்லங்களுக்கும், முதியோர் இல்லங்களுக்கும் நம்மால் இயன்ற பொருளைக் கொடுக்கலாம். செல்வர்கள் அதிகளவில் கொடுத்துப் புத்தாண்டு தினத்தில் புண்ணியத்தைத் தேடிக் கொள்ளலாம்.

பண்டிகைகள் தமிழ் இனத்தின் தனித்துவத்தையும் பண்பாட்டையும் பேணி நம்பிக்கையும் உறுதியும் தருவதால் அவை அவசியம் கொண்டாடப்பட வேண்டியவை. விக்கிரம வருடமே! வருக! வருக! தமிழ் மக்களின் துயர் போக்கி நல்வாழ்வு தருக! தருக!

* * *

# பண்பை, பாரம்பரியத்தை பேண புத்தாண்டில் உறுதி கொள்வோம்

தமிழரின் வாழ்வியல் வழக்கப்படி வருடங்கள் அறுபதாகக் கைக்கொள்ளப்கிறது. அவை பிரபவ ஆண்டில் தொடங்கி அஷய ஆண்டில் முடிவடையும். இந்த அறுபது ஆண்டுகளும் மாறி மாறி வந்து கொண்டேயிருக்கும். கி.பி. 2000 ஆண்டாகிய புத்தாயிரமாம் ஆண்டு பிறந்துள்ள இவ்வேளையில் தமிழ் வருடப் பிறப்பு பதினான்காவது ஆண்டான விக்கிரம ஆண்டில் தொடங்குகிறது. ஆண்டாண்டு தோறும் தமிழ் வருடம் சித்திரையில் தொடங்கி பங்குனியில் நிறைவடையும். இளவேனிற் காலத்தின் முதலாவது மாதம் சித்திரையாகும். இக் காலத்தில் சூரியன் மேட இராசியில் புகும்போதே தமிழ்ப் புத்தாண்டின் பிறப்புச் சிறப்புறுகிறது.

தமிழ் வழங்கும் நல்லுலகில் சித்திரை தொடக்கம் பங்குனிவரை இவ்விரண்டு மாதங்களாக முறையே இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி எனக் கால வரையறை செய்யப்பட்டுள்ளது. இளவேனிற்காலம் இன்பமான காலம். இயற்கை அன்னை பூத்துக் குலுங்கிக் காயும், கனியுமாய் மக்கள் வாயையும், வயிற்றையும் நிரப்பும் காலம். பட்டி தொட்டிகளெல்லாம் பால் வளமும், பசுமை வளமும் பெருகும் காலம். இந்தக் கால வருகைக்குக் கட்டியம் கூறுவது போல, இத்தரை மாந்தர் மகிழச் சித்திரைப் பொன்னாள் சூரியனை மேட இராசியில் இட்டு ஒளிபரப்பி வானுலா வரக்கண்டு உவப்பெய்தி ஒளி வெள்ளத்தில் குளிக்கிறான்.

இந்த வரவைச் சிந்தை மகிழ்வோடு வரவேற்கும் பண்டிகைதான் வருடப்பிறப்புக் கொண்டாட்டமாகும். முன்பனி, பின்பனிக் காலங்களில் ஓய்விலும் உள்ளகத்திலும் ஓரளவு உலகையோடு இருந்துவிட்டு மக்கள் உற்சாகத்தோடு உழைப்பிலும் ஊக்கத்திலும் உத்வேகமாக இளவேனிற் காலத்தில் ஈடுபடுவர். காதலும் வீரமும் அவைசார் கருமங்களும் இக் காலத்தில் களைகட்டி நிற்கும். சூரியன் தரும் பாரிய சக்தியைப் பயன்பாடாக்கி நயம்பெறும் நன்முயற்சிகள் நடைபெறும். இந்த நன்முயற்சிகளைத் தொடங்குவதற்குப் புண்ணிய காலங்களும் விசேட தினங்களும் இன்றியமையாதனவாகும். இவற்றை நம் முன்னோர்களான அறிவறிந்த சான்றோர் பகுத்தும் தொகுத்தும் தந்துள்ளனர். இக்காலங்களிலேதான் சாந்தியும் அமைதியும் நிறைந்த சாத்வீகக் குணம் மனித உள்ளத்திலே மேலோங்கி நிற்கும். இதனாற்போலும் சாத்வீக குணத்தை வளர்க்கும் சாதனங்களாக விசேட நாள்கள் அமைக்கப்பட்டன.

இந்தச் சாந்தி நிலையை அகத்திலும் புறத்திலும் ஏற்படுத்துவதற்காகக் குடியிருப்பு இல்லங்களையும், தொழில் வள நிலையங்களையும், குளங்குட்டைகளையும், ஆலயங்களையும், சமூக நிறுவனங்களையும் துப்புரவுசெய்து தூய்மையாக்கும் பணியில் மக்கள் ஈடுபடுவர். பழையன கழைதலும்,புதியன புகுதலும் இடம்பெறும்.

நா. க. சண்முகநாதபிள்ளை

புதுவருடப் பிறப்புக்கு முதல் நாள் இரவே வீடுகளிலும், ஆலயங்களிலும் பூரண கும்பம் வைக்கப்படும். மங்களகரமான பொருள்களை கும்பத்தின் அருகே வைத்து, வருடப் பிறப்பன்று காலையில் துயிலெழுந்து அந்த மங்கள கும்பத்தையும், மங்களப் பொருள்களையும் முழி விசேடமாக ஏற்றுக்கொண்டு, மருத்து நீர் சாத்திக் குளிர்ந்த நீரிலே குளித்துத் தாய், தந்தையரையும் பெரியோரையும் வணங்கி, நல்லாசிகள் பெற்றுப் புத்தாடை புனைந்து பூரிப்போடு ஆலயம் சென்று இறைவணக்கம் செய்து, பண்டிகைக் கொண்டாட்டங்களை மக்கள் ஆரம்பிப்பர். வீடுகளிலே கோலமிட்டு புதுப்பானையிற் பொங்கி இனிய தின்பண்டங்களைப் படைத்து இறை அர்ப்பணமாக்கித் தென்புலத்தாரையும் நினைந்துருகி, ஒப்புடன் முகமலர்ந்து செல்விருந்து ஓம்பி, வருவிருந்து காத்திருந்து விருந்தோம்பல் நடைபெறும்.

